வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu
ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 14.01.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 40 | பக்கங்கள் : 16




## கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். முற்றவெளியில் நேற்று பொங்கல்

*யாழ்ப்பாணம், ஜன. 14*

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விடுதலைப் பொங்கல் நிகழ்வு நேற்று யாழ். முற்றவெளியில் இடம்பெற்றது.

பல வருடங்கள் அரசியல் கைதிகளாக சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளை பொங்கல் தினத்தில் அல்லது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பின் அடிப் 15



## கொரோனாவால் 11 பேர் உயிரிழப்பு

*கொழும்பு, ஜன. 14*

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 11 மரணங்கள் இடம்பெற்றன என்று நேற்று வியாழக்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

மரணமானவர்களில், 7 ஆண்களும் 4 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில், 8 பேர் 60 15

# தமிழர்கள், முஸ்லிம்கள் மீதான அரசின் தாக்குதல் தொடர்கிறது

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் புதிய அறிக்கை

**நியூயோர்க், ஜன. 14**

**2021இல் இலங்கை அரசாங்கம் சிறுபான்மை சமூகங்களை ஒடுக்கிறது. செயல்பாட்டாளர்களை துன்புறுத்தியது அத்துடன், ஜனநாயக நிறுவனங்களை குறைமதிப்புக்கும் உட்டுபடுத்தியது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று வெளியிட்ட புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.** 15

HUMAN RIGHTS WATCH

## மாதகல் மீனவர் மரணம்; நீதி கோரி போராட்டம்!



*யாழ்ப்பாணம், ஜன. 14*

மாதகல் கடற்பரப்பில் இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்த மீனவருக்கு நீதி கோரி அவரின் சடலத்துடன் நேற்று போராட்டம் ஒன்று முன் 15

## ஆவா குழு தலைவன் உட்பட இருவர் சரண்!

*யாழ்ப்பாணம், ஜன. 14*

ஆவா குழுவின் தலைவர் என்று கூறப்படுபவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். 15

## புகையிரத நிலைய அதிபர்கள் திடீர் வேலைநிறுத்த போராட்டம்!

### வடக்கு ரயில் சேவை இன்று வழமைக்கு

*கொழும்பு, ஜன. 14*

இலங்கை புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தினர் முன்னறிவிப்பின்றி நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இதனால், தைப்பொங்கலுக்காக வீடு திரும்ப 15

## மீண்டும் கொரோனா அலை நாட்டில் ஏற்படும் அபாயம்!

### மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரிக்கை



*கொழும்பு, ஜன. 14*

நாட்டில் மீண்டும் கொரொனா அலை ஏற்படும் அபாய நிலை உள்ளதாக தேசிய தொற்று நோய் விஞ்ஞான நிறுவகத்தின் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் 15



வைகுண்ட ஏகாதசி தினமான நேற்று யாழ்ப்பாணம் வண்ணை. ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சொர்க்கவாசல் திறப்பு நடைபெற்றபோது...!

## மீசாலையில் சட்டவிரோதமாக 5ஜி கோபுரங்கள் நிர்மாணம்!

### பொதுமக்களிடையே பெரும் அச்சம்



*தென்மராட்சி, ஜன. 14*

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட மீசாலை மற்றும் கிராம்புவில் பிரதேசங்களில் பிரதேச சபையின் அனுமதி பெறாமல் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் ஸ்மாட் லாம்போல் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு தொலைத் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 15


## நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்துக

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

*கொழும்பு, ஜன. 14*

இம்முறை அரச வெசாக் விழாவுக்கு முன்னதாக நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்க்ஷ தெரிவித்தார்.

2022 அரச வெசாக் விழாவை இம்முறை பலாங்கொடை கூரகல வரலாற்று 15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# வீட்டிலிருந்து வேலை செய்வதால் வீண் செலவுகளை குறைக்கலாம்

## கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 14
நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிப்பதன் மூலம் பெறுமதியான நேரத்தை மிச்சப்படுத்துவது மற்றும் தேவையற்ற செலவுகளை குறைக்க முடியும் எனக் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று நோயின் போது பெருமளவிலான அரச துறை ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்ததால், மதிப்புமிக்க தொழில் நுட்பப் பாடங்களை அவர்களால் பெற முடிந்ததாக அமைச்சர் குணவர்த்தன கூறினார்.

மஹரகமவில் நடைபெற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், அன்றாட நடவடிக்கைகளில் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். (அ)

# இப்படியும் நடக்கிறது...!

நமது வரலாறுகள் எப்போதுமே தலைகீழாகவே எழுதப்படுகின்றன. இதுகுறித்து முன்னரும் ஒருதடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது ஈழத்தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத துயர சம்பவம். ஆனால், அது எப்போது எரிக்கப்பட்டது என்பதைப் பற்றிக்கூட நாம் சமராடிக் கொண்டிருக்கின்றோம் என்பதை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

நமது போராட்ட வரலாறுகள் பற்றிய குறிப்பு ஒன்றை முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சரும் மூத்த போராளிகளில் ஒருவருமான வரதராஜப்பெருமாள் தனது முகநூலில் எழுதியிருந்தார்.

அதனை அப்படியே இங்கே தருகின்றேன்.

'... ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றை பக்கச் சார்பற்று நேர்மையாக எழுத வேண்டும் - சொல்ல வேண்டும் என்று சொல்லுகிற ஒவ்வொருவரும் தாங்கள் நேரடியாக பங்கு பற்றாத, தங்களுக்கு நேரடியாகத் தெரியாத விடயங்கள் பற்றி குறிப்பிடுகையில் தங்களுக்கு வசதியாக ஏதோ முழுமையாக உண்மைகளைத் தெரிந்த மாதிரி அடித்து விடுகிறார்கள்.

இப்படியேதான் தமிழர்களின் சொந்த வரலாற்று அறிவு இருக்கப்போகிறது. அதற்கேற்பதான் எதிர்காலமும் இருக்கும். இனி உண்மைகளை நேர்மையாகச் சொல்ல - எழுத எவராவது முயன்றால் அவர்கள் அவமானத்தை - அநாவசியமான வசைகளை - எதிர்ப்புகளைத்தான் சம்பாதிப்பார்கள். இருக்கும் நண்பர்களையும் இழப்பார்கள். மலையகத் தமிழர்கள் பற்றி திம்பு பேச்சின்போது முன் வைக்கப்பட்ட கோரிக்கை பற்றி ஒருவரின் குறிப்பை முகநூலில் இன்று பார்த்தபொழுது இப்படி எழுதத் தோன்றியது.

கடந்த காலத்தில் பல சந்தர்ப்பங்களில் இப்படி உணர்வு ஏற்பட்டது. இன்று இதை மட்டுமாவது எழுதிவிடத் தோன்றியது, அவ்வளவுதான். ஒவ்வொருவரும் தங்களைப் பற்றியும் தாங்கள் சார்ந்தவர்களையும் நிகழ்காலத்தில் தக்கவைப்பதற்கு ஏற்றபடிதான் வரலாற்றுக் குறிப்புகளை சொல்வது - எழுதுவது பொதுவான போக்கு. உண்மைகளை அறிவதற்கு அவற்றை கேட்கும் பொறுமையும், ஜீரணிக்கும் திறனும் வேண்டும்...'

இவ்வாறு வரதராஜப்பெருமாள் ஆதங்கப்படுவது சரியானதுதான். ஆனால், அவராவது தனக்குத் தெரிந்ததை மட்டுமாவது எழுதிவைக்கலாம் என்றும் சொல்லாமல் விடமுடியவில்லை.

இதைப்படித்தபோதுதான், யாழ்ப்பாண நாக விகரை பற்றி அண்மையில் வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஐயா தெரிவித்த தகவல் ஒன்றும் ஞாபகத்திற்கு வருகின்றது.

இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற ஒவ்வொரு தலைவர்களும் நல்லூருக்குப் போவார்கள், பின்னர் நாகவிகாரைக்குப் போவார்கள். பின்னர் அப்படியே ஒருதடவை யாழ். ஆயர் இல்லத்திற்கும் போய்வருவார்கள்.

நாக விகாரை என்றதும் யாழப்பாணத்தில் இது ஏதோ ஆண்டாண்டுகாலமாக இருப்பதுபோலவே நாம் நினைத்திருக்கின்றோம். அது எப்படி வந்தது என்று சிவஞானம் ஐயா விபரமாகத் தெரிவித்திருந்தார். அவர், யாழ்ப்பாண மாநகர சபையில் துரையப்பா காலத்திலிருந்து பணிசெய்தவர். பின்னர் ஆணையாளராக நீண்டகாலம் மாநகர நிர்வாகத்தை பராமரித்தவர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது நாக விகாரை இருக்கும் இடத்தில் ஒரு சிங்கள ஆயுர்வேத வைத்தியர் வசித்துவந்ததாகவும், அவர் தான் வழிபட அமைத்த ஆலயமே பின்னர் நாக விகாரையாக மாறியதாகவும் ஒரு தகவலை அவர் தெரிவித்திருந்தார்.

அதுமாத்திரமன்றி, அந்த வைத்தியர் குடியிருந்த காணி வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்குச் சொந்தமானது என்றும் சிவஞானம் ஐயா தெரிவித்திருந்தார்.

அதாவது, இன்று நாக விகரை இருக்கும் காணி, வண்ணை சிவன்கோவிலுக்குச் சொந்தமானது என்பதே அவர் தெரிவித்திருந்த தகவல்.

வண்ணார்பண்ணை சிவன்கோவிலுக்குச் சொந்தமான காணிகள் யாழ்ப்பாண நகரத்தில் பல்வேறு இடங்களில் இன்றும்கூட இருக்கின்றன என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டியது.

சிவஞானம் ஐயா தெரிவித்த இந்தத் தகவல் 'ஈழநாடு' பத்திரிகையிலும் பிரசுரமாகியிருந்தது.

அதனைப் படித்த, 'ஈழநாடு' ஸ்தாபகர் கே. சி. தங்கராஜா அவர்களின் மருகர் சட்டத்தரணி சிவகணேசன் ஒரு குறிப்பை அனுப்பியிருந்தார்.

வண்ணார்பண்ணை சிவன் கோவிலின் பரிபாலகராக இருந்த கந்தப்ப செட்டியார், தன்னிடம் இந்தத் தகவலை ஒருதடவை தெரிவித்திருந்தார் எனவும், சிவஞானம் ஐயா சொன்ன தகவல் சரியானதே என்றும் அவர் தனது குறுந்தகவலில் தெரிவித்திருந்தார்.

வண்ணை சிவன்கோவில் தொடர்பான சட்ட விடயங்களை தான் கவனித்தார் எனவும் அப்போதே அவர் இந்தத் தகவலை தன்னிடம் தெரிவித்தார் என்றும் சட்டத்தரணி சிவகணேசன் தெரிவித்திருக்கின்றார்.

ஆக, சிவஞானம் ஐயா போன்றவர்கள் இவ்வாறு தமக்குத் தெரிந்த சங்கதிகளை வெளிக்கொணரவேண்டியது அவசியம். நமது அடுத்த சந்ததிக்கு வரலாறுகள் சரியாக சென்றடையவேண்டும். அது காலத்தின் கட்டாயம்கூட.!

- ஊர்க்குருவி.

## தமிழர் திருநாள் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 14
இயற்கைவழி இயக்கம், சிறகுகள் அமையம், சுவடி நிறுவகம், எங்கட புத்தகங்கள் ஆகிய அமைப்புக்களின் ஒன்றிணைவில் எழுதிரள், ஒருங்கிணைந்த செயல்பாட்டாளர்களின் தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் வள்ளுவராண்டு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல், கோண்டாவிலிலுள்ள எழுதிரள் பணிமனையில் நடைபெறும்.

இதன்போது, 'ஏர்முனை' நூல் வெளியீடு? 'நீர் நிலைகளை மீட்டெடுப்போம்' என்ற தலைப்பில்நிமல் ராகவனின் (இயற்கைவழிச் செயற்பாட்டாளர், தஞ்சாவூர், தமிழ்நாடு) அனுபவப் பகிர்வு, இயற்கை விவசாயம் மீள்பார்வை உரையை பேராசிரியர் ந.சிறீஸ்கந்தராசா, சி.சுந்தரேஸ்வரன் ஆகியோர் ஆற்றுவோர். (ஐ)

## பட்டிப் பொங்கலும் விருது வழங்கலும்!

யாழ்ப்பாணம், ஜன. 14
யாழ்ப்பாணம் சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெறும் பிரசித்தி பெற்ற பட்டிப் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது, சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் ஆரம்பமாகும் கோ பவனி மின்சார நிலையவீதி, பெரியகடை, யாழ். பேருந்து நிலைய மேற்கு வீதி, ஆஸ்பத்திரி வீதி ஊடாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும்.

இதைத் தொடர்ந்து பட்டிப் பொங்கல் நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து ஆசியுரைகள் இடம்பெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன், தமிழ்த் தேசிய பசுமை இயக்க தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் கு. சுரேந்திரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் பங்கேற்பர்.

மேலும், இந்த நிகழ்வில் ஆநிரை காப்போருக்கு 'பசு புண்ணிய' விருது வழங்கப்படவுள்ளது. (ஐ)

# கல்வியியல் கல்லூரிகள் நாளை முதல் திறக்கும்

கொழும்பு, ஜன. 14
தேசிய கல்வியியல் கல்லூரிகளை நாளை சனிக்கிழமை முதல் திறக்குமாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தேசிய கல்வியியல் கல்லூரிகள் பல மாதங்களாக மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, தற்போது தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிகளை பின்பற்றும் உயர்தர மாணவர்களை உள்வாங்குவதற்காக புதிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவுவதற்கும் கல்வி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)



# வந்தாறுமூலையில் 250 பேருக்கு தென்னங்கன்றுகள் விநியோகம்

மட்டக்களப்பு, ஜன. 14
வீட்டுக்கு வீடு 'கற்பகதரு' 40 இலட்சம் தென்னங்கன்றுகளை நடும் தேசிய வேலைத் திட்டத்தின் மற்றுமொரு கட்டம் வந்தாறுமூலையில் உள்ள இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் ஏறாவூர்பற்றுக்கான பிராந்திய பணிமனை வளாகத்தில் நேற்று இடம் பெற்றது.

இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகளை வழங்கினார்.

அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் 250 பயனாளிகளுக்கு தலா மூன்று தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன. (அ)

# கொரோனா தடுப்பூசி விடயத்தில் உலகின் மூன்றாவது நாடு நாமே!

## கெஹலிய பெருமிதம்



கொழும்பு, ஜன. 14
தடுப்பூசி விகிதத்தில் உலகில் உள்ள 194 நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் இருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்த நூற்றாண்டில் ஒரு நாடு என்ற வகையில் மக்களுக்குக் கிடைத்த மிக உயர்ந்த சாதனை ,து என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

தடுப்பூசி மூலம் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டுக்குள் மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பில் பல நடவடிக்கைகள் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும், சில பிரச்னைகளை இனங்கண்டு தேவையான தீர்வுகளுக்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சர் வலியுறுத்தினார். (அ)

ஈழநாடு
Eelanadu
14.01.2021 வெள்ளிக்கிழமை

பிலவ வருடம், தை 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 730 1370**

# பொங்கலும் தீர்வும்

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பது ஒரு தமிழ் நம்பிக்கை. ஆனால், இந்த நம்பிக்கை தமிழரின் அரசியல் வாழ்வில் இன்றுவரையில் வெற்றியளிக்கவில்லை. ஒரு காலத்தில் அடுத்த பொங்கலுக்கு தமிழீழம் என்று கூறப்பட்டது. அதனை நம்பி பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தங்களின் கல்வி வாழ்வை, துறந்து விடுதலைப் போராட்ட இயக்கங்கங் களுடன் இணைந்து கொண்டனர். தங்களை பரித்தியாகம் செய்தனர். ஆனால், இன்றோ, அரசியல் கைதிகளுக்கு விடுதலை வேண்டி, பொங்கல் நடத்துமளவுக்கு நிலைமை சென்றிருக்கின்றது.

‘போர்’ அழிவுகளை கொண்டுவரும் ஆனால், ‘போராட்டம்’ அழிவு களிலிருந்து மீட்சியை கொண்டுவரும் என்றொரு கூற்றும் தமிழ்ச் சூழலில் இருந்தது. ஆனால், கடந்த 70 வருடங்களுக்கு மேலான தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தில், அழிவுகள் மட்டுமே மிஞ்சியிருக்கின்றது. எந்தவொரு விடயத்திலும் தமிழர்கள் முன்னோக்கிப் பயணித்ததாகத் தெரியவில்லை. பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள், ஐரோப்பிய நாடுகளில் சிதறி வாழ்கின்றனர். ஒரு தமிழ் புலம்பெயர் சமூகம் உரு வாகியிருக்கின்றது. தனிப்பட்ட ரீதியில் அவர்களின் வாழ்வு செழிப்படைந் திருக்கின்றது. ஆனால், தமிழர் தாயகத்தில் என்ன நிகழ்ந்திருக்கின் றது?

போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திருந்த நிலையில், இப்போது நாமில்லை. தமிழர் தாயகப் பிரதேசம் நில ரீதியாகவும், சனத்தொகை ரீதியாகவும் பலவீனப்படுத்தப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, கிழக்கு மாகா ணத்தில் தமிழர்களின் இருப்பு திட்டமிட்டு பலவீனப்படுப்பட்டிருக்கின் றது. தமிழர் தாயகக் கோட்பாட்டை பலவீனப்படுத்துவதற்கான இதய நிலமாக கிழக்கு மாகாணத்தையே, சிங்கள ஆட்சியாளர்கள் தெரிவு செய்தனர். கிழக்கை திட்டமிட்டு ஆக்கிரமித்தனர்.

கிழக்கில் அவர்கள் பணி முடிந்திருக்கும் நிலையில், இப்போது வடக்கு நோக்கி அவர்களின் பார்வை திரும்பியிருக்கின்றது. ஆனால், நாம் இப்போதும், வெறும் கோஷங்களுடன் அரசியல் செய்ய முற்படுகின்றோம். தந்திரோபாயம் சார்ந்து எதனையும் முனனெடுக்கும் நிலையில் இல்லை. தந்திரோபாயம் சார்ந்து எவரேனும் பேசினால், உடனேயே, அவர்கள் மீது கற்களை வீச முற்படுகின்றோம்.

அரசியல் தீர்வு விடயத்தில் இதுவரையில் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. சமஷ்டியிலிருந்து தனிநாடு நோக்கி நகர்ந்த ஈழத் தமி ழரின் அரசியல் - இறுதியில் மீளவும் சமஷ்டி கோரிக்கைக்கே திரும்பி யிருக்கின்றது. ஆனால், எஸ். ஜே. வி. செல்வநாயகம், சமஷ்டி கோரிக் கையை முன்வைத்தபோது, அதனை எவ்வாறு அடைவது என்னும் கேள்விக்கு அவரிடம் பதிலிருக்கவில்லை. இப்போதும் சமஷ்டி பற்றி பேசும் சம்பந்தனிடமும் - எப்படி சமஷ்டியை அடைவது என்னும் கேள்விக்கு பதில் இல்லை. தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்த போதும் தமிழ் அரசு கட்சியிடம் எந்தவொரு திட்டமும் இருந்திருக்க வில்லை. ஒன்றை எவ்வாறு அடைவது என்று தெரியாதபோது, ஒருவர் அல்லது ஒரு கட்சியினர் - எவ்வாறு அது தொடர்பில் நம்பிக்கையுடன் பேச முடியும்?

இன்று திரும்பிப் பார்த்தால், இதுவரையான தமிழர் அரசியல் பயணத்தில் - மாகாண சபை ஒன்றுதான் எஞ்சியிருக்கின்றது? எதிர் காலத்தில் அதுகூட விட்டு வைக்கப்படுமா என்னும் கேள்வி எழுந்தி ருக்கின்றது. ஒரு தனிநாட்டுக்கான ஆயுத விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிவுற்றால், அதன் விளைவு இவ்வாறுதான் அமை யும். ஒரு போராட்டத்தின்போது இடம்பெறும் இழப்புக்கள் மற்றும் அழிவுகளுக்கான வெகுமதி என்பது, வெற்றி மட்டும்தான். வெற்றி இல்லாவிட்டால், பின்னர் அனைத்துமே சர்வ நாசமாகிவிடும். அவ்வாறான சூழலில், எஞ்சிக்கிடக்கும் விடயங்களிலிருந்துதான் புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இதுதான், தமிழர்களின் இன்றைய நிலை...!

# சிங்களவருக்கு தமிழ் தேவையில்லையாம்!

## மொழி கற்கைகளில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள ஒரு கருத்து....

த.மனோகரன்

*சிங்களவருக்குத் தமிழைக் கற்பிப்பதை விட தமிழருக்கு சிங்களத்தை கற்பிப்பதன் மூலம் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியு மென்று தேசிய மொழிகள் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் ஜயம்பதி ஹிங்கிந்த கூறியுள் ளார்.*

*வட,கிழக்கு மாகாண மக்கள் சிங்கள மொழியைக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டு வதை ஜெனிவா மனித உரிமை ஆணை யத்தின் வருகை தரும் பிரதிநிதி களுக்கு தெரிந்து கொள்வதற்காக அவர்களை வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு பயணம் செய்யுமாறு தான் கேட்டுக்கொள் வதாக அவர் மேலும் கூறியுள்ளார்.*



*தற்போதைய அரசாங்கத்தின் தேசிய நல்லிணக்க செயற்பாடு களின் நோக்கத்திற் கிணங்க இதுவரை வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் சிங்கள மொழியைக் கற்பதில் கூடிய அக்கறை ஏற்பட்டுள்ளது. அதை மேலும் வளர்ப்பதற் காகத் தனது நிறுவனம் மேலும் பல செயல்திட்டங்களை மேற்கொண்டுள்ளதாக வும் ஜயம்பதி தெரி வித்துள்ளார். நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள பிரச்னைக்கு இது தீர்வாக அமையுமென்றும் அவர் கூறியுள்ளார்.*

*இந்நாட்டின் இனப்பிரச்னைக்கு மூலக் காரணமாக அமைந்தது தமிழ் மொழி புறக் கணிப்பே என்பதும், தமிழர் மீதான சிங்கள மொழித் திணிப்புமே என்பது கற்றுணர்ந்த சிங்களவர்களே ஏற்றுக்கொண்டுள்ள நிலை யில் தேசிய மொழிகள் பயிற்சி நிறுவனத்தின் தலைவரின் கூற்று இந்நாட்டை 1956ஆம் ஆண்டின் தனிச்சிங்கள சட்டத்தின் கீழ் கொண்டுவரும் செயலாகக் கணிக்க முடிகின் றது.*

*அவரின் கூற்றுப்படி தமிழர், அதிலும் தமிழ் அரசாங்க அலுவலர்கள் சிங்களம் கற்க வேண்டும், தேர்ச்சி பெற வேண்டும். ஆனால் சிங்களவர்கள் எவரும் தமிழ்மொழியைக் கற்கத் தேவையில்லை. வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் உள்ளவர்கள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என்று கூறுவது தெரிகின்றது.*


*இந்நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னைக்குத் தீர்வாக இரு மொழிகள் அதாவது தமிழையும் சிங்களத்தையும் கற்க வேண்டும். இரு மொழிகளிலும் அரச அலுவ லர்கள் பணியாற்ற வேண்டும் என்ற எதிர் பார்ப்புடன் மேற்கொள்ளப்பட்ட சகல நிபந்தனைகளும், விதிமுறைகளும் மீறப்படும், புறக்கணிக்கப்படும் நிலை உருவாகிவிட்டது.*

**இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னைக்குத் தீர்வாக இரு மொழிகள் - அதாவது தமிழையும் சிங்களத்தையும் கற்க வேண்டும். இரு மொழிகளிலும் அரச அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்பட்ட சகல நிபந்தனைகளும், விதிமுறைகளும் மீறப்படும், புறக்கணிக்கப்படும் நிலை உருவாகிவிட்டது.**

*மீண்டும் இனங்களுக்கிடையேயான முறு கல் நிலை என்ற பூதம் வெளிவர முயல்கின் றது. தேசிய மொழிகள் பயிற்சி நிறுவனத்தின் தலைவரே ஒருதலைபட்சமாக தேசிய மொழி களில் ஒன்றான தமிழ்மொழியைப் பயில்வது அவசியமற்றது என்று கூறியிருப்பது நாட்டை திரும்பவும் இன நல்லுறவு அற்ற இருண்ட காலத்திற்கு இட்டுச்செல்லுமோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.*

*கொள்கை ரீதியாக முடிவெடுக்க வேண் டிய மொழிப்பிரச்னையில் ஓர் அரச அதிகாரி தன்னிச்சையாகக் கருத்துத் தெரிவிப்பது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையோ என்று வினவத் தோன்றுகிறது. 13ஆம் மற்றும் 16ஆம் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் குரல் கொடுக்கும் தமிழ் அரசியல் தலைவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துவார்களா?*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பணத்தேவை ஒன்று நிறைவேறும். நிதி வளம் சிறக்கும். ஊதிய உயர்வு கிடைக்கலாம். அரசு வகையில் உதவி கிடைக்கும். நீண்ட நாளாக இருந்த மனக்குழப்பம் தீரும். யோகமான நாள்.

**இடபம்**
வெளிநாட்டில் இருந்து மகிழ்ச்சியூட்டும் செய்தி வரலாம். தாமதமாகிய நன்மை தேடி வரும். கடமையில் கவனம் குவியும். மகன், மகளின் வாழ்க்கைத்தரம் உயரும். ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்**
உங்களது முயற்சி வெல்லும். கலைத்துறையில் ஆர்வம் வரும். கலைத்துறையினர் தங்கு தடையின்றி புதிய வாய்ப்பை பெறலாம். சாதுர்யமாக செயல்பட்டு பிறரிடம் பாராட்டு பெறுவீர்கள்.

**கடகம்**
நல்ல பெயரை எடுப்பதற்கு உண்டான செயல்களை செய்வீர்கள். எதிர்பார்த்த பயண வாய்ப்பு வரும். மதிப்புக்குரியோர் உங்களை பாராட்டுவர். வீண் கோபம் வேண்டாம். குடும்பத்தில் கலகலப்பு கூடும்.

**சிம்மம்**
உடல் ஆரோக்கியம் சீராகும். வீடு வாங்கும் முயற்சி வெற்றிதரும். தாய்வழி உறவினரின் ஆத ரவு உண்டு. சுபநிகழ்ச்சி ஒன்று கைகூடும். பணியிடத்தில் உங்களுக்கு தேவையான உதவி,

**கன்னி**
எந்தவொரு விஷயத்திலும் கூடுதலான கவனம் தேவை. பணியில் அலட்சியமாக இருக்க வேண்டாம். சேமிப்பில் ஆர்வம் கூடும். நீங்கள் முயற்சித்த விஷயம் தாமதமான வெற்றியை தரும்.

**துலாம்**
கோபத்தில் வரும் வார்த்தைகளை கட்டுப்படுத்த வேண்டும். நன்மை நடக்கவில்லையே என்ற ஆதங்கம் விரைவில் தீரும். குழந்தைகள் பற்றிய கவலை வேண்டாம். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
மாறுபட்ட அனுபவம் ஏற்படும் நாள். புதிய வேலை கிடைக்கும். பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்க்கும் உதவி எளிதில் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
உங்களது பேச்சில் கவர்ச்சி அம்சம் கூடும். சோம்பலைத் தவிருங்கள். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். அரசியல்வாதிகள் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

**மகரம்**
குடும்பத்தினரின் கோபத்தைத் தீர்க்க வழி செய்வீர்கள். பல நன்மைகள் கிடைத்தாலும் விழிப்புடன் செயல்படுங்கள். என்றோ செய்த கருணைச் செயல் இன்று நன்மை தரும்.

**கும்பம்**
இழுபறியாக இருந்த விஷயங்கள் இன்று நடந்து முடியும். மிகுந்த முயற்சியாலும் உழைப்பாலும் உங்களின் கையிருப்பு கூடும். என்றோ உழைத்ததன் பலனாக இன்று திடீர் அதிர்ஷ்டம் வரும்.

**மீனம்**
அவசரப் பேச்சினால் யாரையும் புண்படுத்த வேண்டாம். குடும்பத்தில் ஒருவருக்கு திடீர்ப் பயணம் ஒன்று ஏற்பாடாகும். பரபரப்பாக சில செயல்களை செய்து முடிப்பீர்கள். சுபச்செலவு வரும்.

# ‘நீட்’ தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்களிக்கப்பட வேண்டும்

## பிரதமர் மோடியிடம் ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, ஜன 14

“நீட்”தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்களிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளையும், சென்னையில் உள்ள செம்மொழி தமிழாய்வு மையத்தின் மத்திய நிறுவன கட்டடத்தையும் பிரதமர் மோடி நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டார்.

அப்போது தமிழக அரசின் திட்டங்களைப் பட்டியலிட்ட முதல்வர் ஸ்டாலின், “மருத்துவத் துறையில் நமது நாட்டிற்கே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கான அனுமதியையும், ஒத்துழைப்பையும், நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கி வரும் ஒன்றிய அரசுக்கும் - குறிப்பாக, இந்தியப் பிரதமருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பல மாநிலங்களில் மருத்துவர்களின் பற்றாக்குறை நிலவி வரும் இச்சூழலில், தமிழ்நாட்டில் மருத்துவம் பயிலும் மாணவர்கள் கிராமப்புறங்களிலும் அரசுத் துறையிலும் சிறப்பாகச் சேவை செய்வதற்குத் தமிழ்நாடு அரசின் மாணவர் சேர்க்கை கொள்கையே அடிப்படையாகும். எங்களது கொள்கை, இந்த வாய்ப்புகளைத் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற - ஏழை - எளிய மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்வதே.

தமிழ்நாட்டின் மருத்துவத் துறையின் வெற்றியும் இந்தக் கொள்கையின் விளைவே. இந்த அடிப்படைக் கொள்கை பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். எனவே மனிதவள ஆற்றலின் அடித்தளமாக அமைந்துள்ள மாணவர் சேர்க்கை முறை தொடர்பான தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஒன்றிய அரசு நிறைவேற்றித் தர வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

# தை பிறந்தால் வழி பிறக்கும்

## மருத்துவக் கல்லூரிகள் திறப்பு விழாவில் மோடி

சென்னை, ஜன 14

“பள்ளிகளில் தாய்மொழி மற்றும் உள்ளூர் மொழிகளில் கல்வி கற்பதை ஊக்குவிக்கிறோம். பொறியியல் போன்ற தொழில்நுட்பப் படிப்புக்களை இந்திய மொழிகளில் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் பணியை எங்கள் அரசு தொடங்கியுள்ளது. பல பிரகாசமான பொறியாளர்களைத் தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. அவர்களில் பலர் உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் வணிகத் தலைவர்களாக மாறியுள்ளனர்” என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிதெரிவித்தார்.

தமிழகத்தில் 11 மருத்துவக் கல்லூரிகளை காணொலிக் காட்சி மூலம் பிரதமர் மோடி திறந்து வைத்தார். இதன்போது “தை பிறந்தால் வழி பிறக்கும் என்று தெரிவித்து தனது உரையைத் தொடங்கிய பிரதமர் மோடி தெரிவித்தவை வருமாறு:

“மருத்துவக் கல்வி என்பது மிகவும் விரும்பப்படும் படிப்புகளில் ஒன்றாகும். மருத்துவர்களுக்கான பற்றாக்குறை இந்தியாவில் நிலவுவது அனைவரும் அறிந்ததே. ஆனால், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண போதிய முயற்சிகள் எடுக்கப்படவில்லை. சுயநல சக்திகள் முந்தைய அரசுகளைச் சரியான முடிவுகளை எடுக்க விடாமல் செய்திருக்கலாம். மேலும், மருத்துவக் கல்விக்கான அணுகலும் பிரச்னையாகவே இருந்தது.

ஒரு மாநிலத்தில் ஒரே நேரத்தில் 11 மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்படுவது இதுவே முதன் முறை என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில நாள்களுக்கு முன்பு, உத்தரப்பிரதேசத்தில் ஒரே நேரத்தில் 9 மருத்துவக் கல்லூரிகளை நான் திறந்து வைத்தேன். எனவே, எனது சாதனையை நானே முறியடிக்கிறேன். பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வது முக்கியம். அந்த வகையில், இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 2 மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. வளர்ச்சித் தேவைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய மாவட்டங்கள் இவை. தொலைதூர மலை மாவட்டமான நீலகிரியில் ஒரு கல்லூரி அமைந்துள்ளது” என்று கூறினார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய கட்டடம் தமிழ்ப் படிப்புகளை மேலும் பிரபலப்படுத்தும். மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பரந்த பரப்பை இது கொடுக்கும். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பல்வேறு இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்க்கத் திட்டமிட்டுள்ளதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல முயற்சியாகும். தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செழுமையால் நான் எப்போதும் ஈர்க்கப்படுகிறேன். ஐக்கிய நாடுகள் சபையில் உலகின் மிகப் பழமையான மொழியான தமிழில் சில வார்த்தைகள் பேசும் வாய்ப்பு கிடைத்தது என் வாழ்வின் மகிழ்ச்சியான தருணங்களில் ஒன்று” என்று தெரிவித்தார்.

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**



**இந்திய பிரபல்யமான பாரம்பரிய**

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை
அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)
075 217 1943

# தேர்தல் ஒத்திவைப்புக்கு அரசுக்குள்ளேயே எதிர்ப்பு

## ஏற்கமுடியாது என்கிறார் திஸ்ஸ விதாரண



**கொழும்பு, ஜன. 14**

**உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் முடிவானது ஏற்புடையதல்ல என்று அரச பங்காளிக்கட்சியான லங்கா சம சமாஜக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.**

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட மேற்படி கட்சியின் பிரமுகரான பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண கூறியவை வருமாறு:

உரிய காலப்பகுதிக்குள், உரிய வகையில் தேர்தலை நடத்துவதே சிறந்த ஜனநாயக பண்பாகும். அந்த வகையில் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதை ஏற்கமுடியாது. எனினும், விசேட காரணமொன்றுக்காக, அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் குறுகிய காலப் பகுதிக்கு அதனை செய்யலாம். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறு செய்வதற்கான தேவை எழவில்லை. அந்த வகையில் பதவி காலம் நீடிப்பானது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. தேர்தல் நடத்தப்பட வேண்டும் - என்றார்.

அதேவேளை, அரச பங்காளிக் கட்சியான சுதந்திரக் கட்சியும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஒத்திவைப்புக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. (அ)

# மருந்து கையிருப்பு அறிக்கையை கோருகிறார் சுகாதார அமைச்சர்!

கொழும்பு, ஜன. 14

உலகளாவிய கொரோனா வைரஸ் நெருக்கடி சூழ்நிலையில் எத்தகைய தடைகளை எதிர்கொள்ள நேர்ந்தாலும் நாட்டு மக்களுக்கு தேவையான மருந்துகளை தட்டுப்பாடின்றி பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமையளித்து செயல்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதேவேளை, எதிர்வரும் 06 மாதங்களுக்கு தேவையான மருந்துகள் தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றை பெற்றுத்தருமாறு அமைச்சர் ரம்புக்வெல சுகாதார அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மூன்று மாதங்களென ஆறு மாதங்களுக்காக இரண்டு அறிக்கைகளை தயாரித்து தேவையான மருந்துகள் தொடர்பில் தமக்கு தெரியப்படுத்துமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வருடத்துக்கு நாட்டுக்கு தேவையான மருந்துகள் தொடர்பில் அமைச்சில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையின்போதே அமைச்சர் கெஹெலிய இத்தகைய பணிப்புரை விடுத்தார்.

வெளிநாடுகளில் இருந்து மருந்துகள் இறக்குமதி செய்யப்படும் போது உள்ளூரில் உற்பத்தி செய்யும் மருந்துகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். (அ)

# அரசை விமர்சிப்பவர்கள்கூட இன்று இந்த அரசினால்தான் வாழ்கின்றனர்

## கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, ஜன. 14

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள்கூட இப்போதும் உயிருடன் இருப்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சாத்தியமான செயல்பாடுகளால்தான் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம், கொரோனா என்ற உயிர்க்கொல்லி நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு தடுப்பூசி செயல்பாடுகளுக்கு முக்கியத்துவமளித்து செயல்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர் அரசாங்கத்தை விமர்சிப்போர் கூட அதனால்தான் இன்றும் உயிருடன் இருக்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



ஜனாதிபதி கோட்டாபய அதிகாரத்துக்கு வந்து ஜனாதிபதி ஆசனத்திலிருந்து கொண்டு அரசியல் செய்யவில்லை. மாறாக கொரோனா ஆட்கொல்லி தொற்றிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு முன்னுரிமையளித்து செயற்பட்டுள்ளார். அவர் அவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளதால் சில அரசியல் கட்சியினர் அரசியல் இலாபம் பெறுவதற்காக குறுகிய செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான ஆட்கொல்லி தொற்றுநோயை முழு உலகமும் எதிர்கொண்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய பதவிக்கு வந்து 02 வருடங்கள் சென்றுள்ளபோதும் அவர் என்ன செய்துள்ளாரெனக் கேள்வி எழுப்புவோருக்கு நாம் சொல்லக் கூடிய பதில் நாம் அனைவருமே இன்று உயிருடனிருப்பது அவர் மேற்கொண்ட செயல்பாடுகளால் தான் என்பதே. நாம் அனைவரும் இணைந்து நாட்டை கொரோனாவிலிருந்து மீட்டெடுப்பதற்காக செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள் மாற்றமில்லை

கொழும்பு, ஜன. 14

இந்த வருடத்தில் நடைபெறவுள்ள க.பொ.த (உ/த) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தர பரீட்சை ஆகிய பரீட்சைகள் நடைபெறும் தினங்களில் மாற்றமெதுவும் இல்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி. பெரேரா தெரிவித்தார்.

உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2021 ஒகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருந்தது. இருப்பினும் இவை இரண்டு முறை பின்போடப்பட்டன. அதன்பின்னர் புதிய திகதிகள் நிர்ணயிக்கப்பட்டன.

அந்தவகையில் புலமைப்பரிசில் பரீட்சை ஜனவரி 22 ஆம் நடைபெறும்.

உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கும் எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் கபில சி. பெரேரா மேலும் தெரிவித்தார். மார்ச் 5 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடத்தப்படும். (அ)

# இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் 2 வாரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

வடக்குக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு அருகே கடந்த வருடம் டிசெம்பர் 19ஆம் திகதி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 43 பேர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டதுடன் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில், இவர்களுக்கான விளக்கமறியலை ஜனவரி 27 ஆம் திகதி வரை நீடிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டது. (அ-03)

# தேர்தல் ஒத்திவைப்பானது ஜனநாயகத்துக்கு சாவுமணி

## இராதாகிருஷ்ணன் விசனம்

கொழும்பு, ஜன. 14

உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஒத்திவைப்பானது ஜனநாயகத்துக்கு அடிக்கப்பட்டுள்ள சாவுமணியாகும். எனவே, தேர்தல் வரை காத்திருக்காமல் இந்த அரசை விரட்டியடிப்பதற்கான நிகழ்ச்சி நிரலை மக்கள் தயாரிக்கவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கிணங்க, பழைய அரசை வீட்டுக்கு அனுப்பி, புதியதொரு ஆட்சியை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் உறுதியேற்கவேண்டும். இதற்காக தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து இன மக்களும் ஓரணியில் திரள வேண்டும். தேர்தல் வரும்வரை காத்திருக்க வேண்டியதில்லை, தற்போதிலிருந்தே நாம் நடவடிக்கையில் இறங்கவேண்டும். நிகழ்ச்சி நிரலை தயாரிக்க வேண்டும்.

நாட்டு மக்கள் இன்று எல்லா வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். எம்மை பொறுத்தவரை இந்த அரசு வீட்டுக்கு சென்றால்தான் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் வழி பிறக்கும்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைகளின் பதவி காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்கு அடிக்கப்பட்ட சாவுமணியாகும். உரிய காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதையும் நாம் கண்டிக்கின்றோம். அது எந்த அரசாக இருந்தாலும் பரவாயில்லை-என்றார். (அ)

# வவுனியாவில் அதிக பனி

வவுனியா, ஜன. 14

வவுனியாவில் தொடரும் பனி மூட்டம் காரணமாக பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வவுனியாவில் கடந்த சில தினங்களாக காலை வேளைகளில் அதிக பனி மூட்டமாக காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், அரச, தனியார் உத்தியோகத்தர்கள் என பலரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தொடரும் இப்பனி மூட்டம் காரணமாக வவுனியா மாவட்டம் நுவரெலியா போன்று உள்ளதைக் காணக் கூடியதாக இருந்தது.

இப்பனிமூட்டம் காரணமாக ஏ-9 வீதி, மன்னார் வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் ஒளியை பாய்ச்சியபடி சென்றமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (அ)

# பொங்கல் பொருள் கொள்வனவில் யாழ்.மக்களுக்கு ஆர்வம் இல்லை!

## கவலை வெளியிட்டனர் வியாபாரிகள்

யாழ்ப்பாணம், ஜன. 14

**இம்முறை தைப்பொங்கலுக்கு பொருட்கள் கொள்வனவு செய்வதில் யாழ்ப்பாண மக்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை என வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் வழமையாக பொங்கல் தினத்துக்கு முதல் நாள் பொருட்கள் கொள்வனவு செய்வதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டுவதால் வீதி முழுவதும் சனக்கூட்டம் நிறைந்து காணப் படுவது வழமை.

ஆயினும் இம்முறை பொது மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் அதிக நாட்டம் காட்ட வில்லை.

யாழ்ப்பாணத்தில் வழமையாக இடம்பெறும் வியாபாரத்தை போல இம்முறை பொங்கல் வியாபாரம் இடம்பெறவில்லை எனவும், தற் போது விலைவாசி அதிகரிப்பு மற் றும் அத்தியாவசியப் பொருட்களுக் கான தட்டுப்பாடு காரணமாக மக்கள் இம்முறை பொங்கல் பொருள் கொள்வனவில் அதிக நாட்டம் காட்டவில்லை எனவும் வியாபா ரிகள் தெரிவித்தனர்.



திருநெல்வேலிப் பகுதியில் வழமை யாக பொங்கல் தினத் துக்கு முதல்நாள் சன நெருக்கடி ஏற்படு வதன் காரணமாக நல்லூர் பிரதேச சபை இம்முறை அதனைத் தவிர்க்கும் வகையில் திருநெல்வேலி சந்தையின் முன் வீதியை ஒரு வழிப்பாதையாக அறிவித்திருந்தது. ஆனாலும்கூட பொதுமக்கள் தைப்பொங்கலுக்கான பொருட்கள்கொள்வனவு செய்வதில் நாட்டம் காட்டவில்லை. (அ)



# கொழும்பு வீதிகளில் மீண்டும் மண்ணெண்ணெய் வண்டி!

கொழும்பு, ஜன. 14

கொழும்பின் சில பகுதிகளில் மண் ணெண்ணெய் வண்டிகளை வைத்திருந் தவர்கள் மீண்டும் மண்ணெண்ணெய் விற் பனையை தங்களது வண்டிகளூடாக ஆரம் பித்துள்ளனர்.

நாட்டில் தற்போது எரிவாயு கிடைக்கா மையால் பெரும்பாலானவர்கள் மண் ணெண்ணெய் அடுப்பை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது மண்ணெண் ணெய்க்கு கடும் கிராக்கி நிலவி வருவதால், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற் றோல், டீசலுக்கு பதிலாக மண்ணெண் ணெய் வாங்க மக்கள் வரிசையில் நிற்பதை காணக்கூடியதாக இருக்கிறது. வரிசையில் காத்திருந்து வாங்குவதை விட வீட்டுக்கரு கில் வரும் மண்ணெண்ணெய் வண்டியிலி ருந்து மண்ணெண்ணெய் வாங்குவது இலகு வானது என்பதால், கொழும்பில் மண் ணெண்ணெய் வியாபாரம் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாக வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# வடமராட்சி வலயத்தில் மாதிரி வீட்டுத்தோட்டம்





வடமராட்சி, ஜன. 14

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் வீட் டுத்தோட்டத்தின் மூலம் பசுமை விவசாயத்தை ஏற் படுத்தி நாட்டு மக்களிடையே நல்லிணக்கம், ஒற்றுமையை ஊக்குவிக்கும் கொள்கைத் திட்டத்தின் கீழ் 551 ஆவது படைப் பிரிவின் அனுசர னையுடன் இலங்கையில் முதன் முதலாக வடமராட்சிக் கல்வி வலயத்தில் மாதிரி வீட்டுத் தோட்டம் நேற்று வியாழக் கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை ஒராங் கட்டைச் சந்திக்கு அண்மையில் உள்ள வலயக் கல்வி வளாகத் தில் வலயக் கல்விப் பணிப்பா ளர் கே.சத்தியபாலன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக யாழ்.மாவட்ட செயலர் கே. மகேசன், 55 ஆவது படைப்பிரி வின் தளபதி பிரிகேடியர் பிர சன்ன குணரத்ன ஆகியோரும்

சிறப்பு அதிதிகளாக பருத் தித்துறை செயலர் ஆ.சிறி, கர வெட்டி பிரதேச செயலர் இ. தயாபரன், மருதங்கேணி பிரதேச செயலர் கு.பிரபாக ரமூர்த்தி மற்றும் வலயக் கல் விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து வளாகத்தில் அமைக்கப்பட்ட 24 நாற்று மேடைகளில் மரக்கறி வகை களுக்கான விதைகள், நாற்றுக் கள் பிரதம அதிதிகள் சிறப்பு அதிதிகள், மாணவர்களால் நடுகை செய்யப்பட்டன. தொடர்ந்து பிரிகேடியர் பிர சன்ன குணவர்ன மாவட்டச் செயலர் கே.மகேசன் ஆகியோர் இந் நாற்று மேடைகளில் பயன்படுத்த சேதனைப் பசளை பொதிகளை வழங்கினார்கள்.

தைப்பொங்கல் தினத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இம் மாதிரி வீட்டுத் தோட்டத்தில் எதிர் வரும் சித்திரைப் புத்தாண்டு டன் அறுவடை இடம் பெறும் எனத் தெரிக்கப்பட்டது. (அ-02)

## பொரளை தேவாலயத்தில் குண்டு;

# கைதாகிய பிரதான சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

கொழும்பு, ஜன. 14

பொரளையில் உள்ள சகல புனிதர்கள் தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று மீட்கப் பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிர தான சந்தேக நபரை 72 மணி நேரம் தடுத்து வைத்து விசா ரணைக்கு உட்படுத்த கொழும்பு குற்றவியல் தடுப்புப் பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது.

சந்தேக நபர் புதுக்கடை நீதவான் நீதிமன்றில் முன்னி லைப்படுத் தப்பட்டமையை அடுத்து இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பிர தான சந்தேக நபர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்ட னர்.

அத்துடன் இந்த குண்டு 13 வயதுச் சிறுவன் ஒருவன் ஊடாக குறித்த தேவாலயத்தில் வைக் கப்பட்டிருந்தமை விசாரணை களில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

பின்னர் குறித்த சிறுவர் புதுக்கடை நீதவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டமையை அவரிடம் நீத வான் வாக்குமூலம் பெற்றுள் ளார்.

நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய குறித்த கைக்குண்டு நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

வெப்பம் அடையும் பட்சத் தில் வெடிக்கும் வகையில் இந்த கைக்குண்டு தயாரிக்கப்பட்டி ருப்பதாகவும் தெரிவிக்கப்பட் டது. (அ)

# தொழிற்சங்கப் போராட்டத்தால் வடக்கு ரயில் சேவையும் பாதிப்பு

கொழும்பு, ஜன. 14

ரயில்வே திணைக்கள பொறுப்பதிகாரிகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டும் தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக, வடக் குக்கான ரயில் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

காலை 9: 45 யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் யாழ்தேவி ரயில் நேற்று சேவையில் ஈடுபடவில்லை.

அதேபோல் பிற்பகல் 1: 45 மணிக்கு புறப்படும் இன்டர்சிற்றி எக்ஸ்பிரஸ் ரயில் சேவையில் ஈடுபடவில்லை. யாழ்தேவி ரயில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் தரித்து நிற்கின்றது. இதனால் முன்பதிவு செய்து ரயிலில் பயணம் செய்வதற்கு வந்த பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதுடன் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

தூர பிரதேசங்களிலிருந்து ஓட்டோ மற்றும் வாகனங்களில் வந்தவர்கள் மீண்டும் அதே வாக னங்களில் திரும்பிச் சென்றனர்.

தமிழர்களின் முக்கிய பண்டிகையான தைப் பொங்களுக்கு வெளிமாவட்டங்களுக்கு செல்ல இருந்தவர்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென் றதை காணக்கூடியதாக இருந்தது. (அ-03)

# பல்கலை செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 14

தற்போது ஏற்பட்டுள்ள சில நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்து உடனடியாக முழு எண் ணிக்கையிலான மாணவர்களுடன் பல்கலைக்க ழகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு எதிர் பார்ப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஒரு சந்தர்ப்பத்தில் 50 சதவீத மாணவர் எண்ணிக்கையுடன் பல்கலைக்கழகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமர துங்க தெரிவித்தார்.

சகல மாணவர்களையும் உடனடியாக அழைப் பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இந்நிலையில் பரீட்சைகளை நடத்துதல், இணையவழி கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற் கான செயற்பாடுகள் என்பன தற்போது பல் கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்படுவதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியுள் ளது. (அ)

# 2005 இல் பிரபாகரனே என்னை தோற்கடித்தார்

## ரணில் விக்கிரமசிங்க ஆதங்கம்

**கொழும்பு, ஜன. 14**

**"2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பிரபாகரன்தான் என்னை தோற்கடிக்க வைத்தார்."-என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



ரணில் விக்கிரமசிங்கவால் ஏன் இன்னும் ஜனாதிபதியாக முடியாமல் உள்ளது என எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நான் இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். 1994 இல் சந்திரிகா மீது குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் முடிவு மாறியது.

அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் என்னை தோற்கடிப்பதற்கு பிரபாகரனே தீவிரமாக செயற்பட்டார்.

அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் பொதுவேட்பாளர்கள்தான் களமிறங்கினர்.

இனிவரும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடுவதா என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. நபர்களை விடவும் கொள்கைகளே முக்கியம்.-என்றார். (அ)

# கௌரவமாக வெளியேறுங்கள்!

## சுதந்திரக்கட்சிக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்தார் நாமல்

கொழும்பு, ஜன. 14

"அரசின் கொள்கைகள் பிடிக்கவில்லையெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கௌரவமான முறையில் வெளியேறவேண்டும். " - என்று அமைச்சல் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சுதந்திரக்கட்சியும் அரசில் அங்கம் வகிக்கின்றது. எனவே, அரசால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அக்கட்சியும் பொறுப்பு கூறவேண்டும். மாறாக தமக்கு தொடர்பில்லை என நழுவிவிடமுடியாது.

அதேபோல அரசின் தீர்மானங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பிடிக்கவில்லையெனில், அங்கும், இங்குமாக விமர்சனங்களை முன்வைத் துக்கொண்டு திரிவதைவிட, கட்சித் தலைவர்கள் கூட்டத் தில்கூறிவிட்டு கௌரவமாக விடைபெறுவதே சிறந்தது-என்றார் நாமல். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இன்றுடன் ஆயிரம் நாட்கள்!

## விசேட செப வழிபாட்டுக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன. 14

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு இன்றுடன் 1000 நாட்கள் நிறைவடைகின்றன. இதனை முன்னிட்டும், நீதி கோரியும் ராகம தேவத்தை தேசிய பசிலிக்காவில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் சகல மறை மாவட்ட ஆயர்கள் மற்றும் துணை ஆயர்களின் பங்கு பற்றலுடன் விசேட செபவழிபாடு இடம்பெறவுள்ளது.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்று 1000 நாட்களாகின்றன. ஆனாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. இது தொடர்பிலும் நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்தும் கடவுளிடம் வேண்டிக்கொள்வதற்கான தேசிய மட்டத்திலான விசேட செப வழிபாடொன்றை நடத்த இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தீர்மானித்திருந்தது.

இதற்கமைவாகவே நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன்படி இன்று முற்பகல் 10 மணிக்கு ராகம தேவத்தை தேசிய பசிலிக்காவிலுள்ள இலங்கை மாத கெபியிலிருந்து பசிலிக்கா தேசிய ஆலயம்வரை ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மக்கள் அனைவரும் செபமலை மற்றும் செபங்கள் உச்சரித்து பவனி செல்வார்கள்.

அதன்பின்னர் பேராயர் தலைமையில் செப வழிபாடுகள் இடம்பெறும். (அ)

# லிற்றோ தலைவர் பதவி நீக்கம்?

கொழும்பு, ஜன. 14

லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்கவை குறித்த பதவியில் இருந்து நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்தோடு, லிற்றோ நிறுவனத்தின் புதிய தலைவராக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முன்னாள் தலைவர் ரேணுக பெரேரா நியமிக்கப்படவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் எரிவாயு கலவை சம்பந்தமாக நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான நெருக்கடியை கவனத்தில் கொண்டு ஜயசிங்கவை நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனில் கொஸ்வத்த லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து விலகிய பின்னர் தெஷார ஜயசிங்க அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் லிற்றோ எரிவாயு நிறுவனத்துக்கு இரண்டு தலைவர்கள் நியமிக்கப்பட்டதுடன் மூன்றாவதாக ரேணுக பெரேரா தற்போது நியமிக்கப்படவுள்ளார். (அ)

# மஸ்கெலியாவில் தொழிலாளர் குடியிருப்பு தீயில் எரிந்து நாசம்!

கொழும்பு, ஜன.14

நுவரெலியா மாவட்டம், மஸ்கெலியா புலூம்பீல்ட் தோட்டத்திலுள்ள தொழிலாளர் குடியிருப்பில் நேற்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் குடியிருப்பு முற்றாக சேதமடைந்தது.

இரு வீடுகளைக் கொண்ட குடியிருப்பே இவ்வாறு தீயால் எரிந்து நாசமாகின.

தீ விபத்து ஏற்படும்போது வீட்டில் எவரும் இருக்காததால் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர். எனினும், இந்த விபத்தால் வீட்டின் உடைமைகளும் பெரும் சேதமடைந்தன.

மின்சார ஒழுக்கு காரணமாக தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். அத்துடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# மோ. சைக்கிள் ஓட்டப் பந்தயம்: இளைஞர்கள் ஐவர் கைதாகினர்!

கொழும்பு, ஜன.14

கொழும்பு, ஹோமாகமை பிட்டிபன பசுமை பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள பிரதான வீதியில், நேற்றுமுன்தினம் பாதுகாப்பற்ற முறையில் மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்ட ஐந்து இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோணபலை, புளத்சிங்கள, முனமலேவத்தை, மீகொடை, தொம்பே ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 17 - 20 வயதுகளை உடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலையடுத்து, ஹோமாகமை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர். (கே)

# சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்த தயங்காதீர்கள்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 14

12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு கோவிட் தடுப்பூசியை வழங்குவதற்கு பெற்றோர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த, 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் உட்பட, நாட்டின் மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர், கோவிட்டுக்கு எதிராக முழுமையாக தடுப்பூசி போடவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் வழங்கிய பரிந்துரைகள் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவில் உள்ள வல்லுநர்கள் நடத்திய பல ஆய்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடுவது தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆறு மாதங்களுக்கு முன்பே தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதாக, அந்தச் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் செனல் பெர்னாண்டோ கூறினார்.

பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடுவதன் மூலம் கோவிட்-19 பரவுவதைத் தடுக்க முடியும் என்று குறிப்பிட்ட அவர், 70 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் இந்த நோக்கத்துக்காக தடுப்பூசி போடவேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை, தடுப்பூசிக்காக பல்வேறு சிக்கல்கள் உள்ள குழந்தைகளை பரிந்துரைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்து கருத்து தெரிவித்த மருத்துவர் செனல் பெர்னாண்டோ, தடுப்பூசி மருத்துவரின் மேற்பார்வையின் கீழ் வைத்தியசாலையில் செலுத்தப்படவேண்டும்.

பாடசாலைகளில் தடுப்பூசி போடும் செயல்முறையானது, சுகாதார மருத்துவ அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.(அ)

# மேலும் 181 பேர் குணமடைவு!

கொழும்பு, ஜன. 14

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 181 பேர் குணமடைந்து நேற்று புதன் கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 67 ஆயிரத்து 700 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 93 ஆயிரத்து 725 ஆக பதிவாகியுள்ளது. (அ)

# பரசூட் செயலிழந்ததால் குதித்தவர் படுகாயம்!

கொழும்பு, ஜன. 13

மலையிலிருந்து குதித்த போது பரசூட் செயலிழந்தமையால் 30 அடியிலிருந்து கீழே விழுந்தவர் படுகாயமடைந்துள்ளார்.

கண்டி, தெல்தொட்டை - கொண்டகலை மலைப் பகுதியில் இருந்து குதித்த ரஷ்யா நாட்டைச் சேர்ந்தவரே இவ்வாறு படுகாயமடைந்தார்.

இந்த சம்பவம் குறித்து அறிய வருவதாவது,

நேற்று முன்தினம், சாகசத்துக்காக கொண்டகலை மலையிலிருந்து குதித்தபோது பரசூட் செயலிழந்தது. கீழே விழுந்த நபர் மரக்கிளையில் சிக்குண்டார். மரக்கிளை முறிவடையவே சுமார் 30 அடி உயரத்திலிருந்து விழுந்தவர் படுகாயங்களுக்கு இலக்கானார்.

அந்தப் பிரதேச மக்கள் 1990அம்புலன்ஸ் சேவைக்கு அறிவித்தமையால் காயமடைந்தவர் உடனடியாக மீட்கப்பட்டு படுகாயமடைந்த பேராதனை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த மலைப் பகுதியில் சுற்றுலா பயணிகள் பரசூட்டில் குதிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்று அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (கே)

# கனிமொழி திட்டமிட்டு ஓரங்கட்டப்படுகிறாரா?



## தி,மு.க.வுக்குள் வெடித்திருக்கும் பனிப்போர்

**20, மே 2011.** அந்த நாளை தி.மு.க தலைவர்கள் யாரும் மறந்திருக்க முடியாது. அன்றைய தினம், 2ஜி வழக்கில் கைதுசெய்யப்பட்டார் கனிமொழி. அந்தச் செய்தி கோபாலபுரத்தை எட்ட, அப்போதைய தி.மு.க தலைவர் கருணாநிதி அடைந்த கோபத்தை 'வார்த்தைகளால் விவரிக்க முடியாது' என்பார்கள் அன்று உடனிருந்த தி.மு.க சீனியர்கள். 'கருணாநிதி மகள்டா... என் பெண்ணையே கைது செய்துட்டாங்களா?' என்று ஆத்திரத்தோடு தன்னை மறந்து தன் கையிலிருந்த பொருளை கருணாநிதி வீசியடித்ததை விவரித்துச் சொல்வார்கள்.

அழகிரி, ஸ்டாலின், செல்வி, தமிழரசு என வாரிசுகள் பலர் இருந்தாலும், கனிமொழி மீது அவருக்குக் கடைசிவரை தனிப்பாசம் இருந்தது. அதேசமயம், 'தலைவர் பொண்ணு...' என்கிற அடையாளத்தையும் தாண்டி, கட்சிக்குள் தனக்கான அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டதோடு, அதை இன்றுவரை தக்கவைத்தும்கொண்டார். கனிமொழி. "அந்த அடையாளம் இப்போது சிலருக்குப் பிரச்னையாகியிருப்பதுதான் 'தி.மு.க குடும்பத்துக்குள்' போர் மேகங்களை உருவாக்கியிருக்கிறது" என்கிறது முதல்வர் குடும்பத்துக்கு மிக நெருக்கமான வட்டாரம்!

மூத்த அமைச்சர் ஒருவர், "முதல்வர் குடும்பத்தின் அடுத்த இலக்கு உதயநிதியை உச்சத்தில் அமரவைப்பதுதான். இளைஞரணிச் செயலாளர், எம்.எல்.ஏ., என 'உயர்ந்துகொண்டே' போகும் உதயநிதியை அமைச்சர், துணை முதல்வர் என அடுத்தடுத்து உயர்த்த, தீவிரமான முயற்சிகள் நடக்கின்றன. அதே நேரம் பல காலமாகக் 'காத்திருப்பு'ப் பட்டியலிலிருக்கும் கனிமொழியைத் திட்டமிட்டுச் சீண்டவும் சில வேலைகள் நடக்கின்றன. அதுதான், 'மொழியா-நிதியா? என்கிற குடும்பப் போராகக் கட்சிக்குள் இப்போது கனன்று எரிகிறது" என்றார்.

இருவருக்கும் இடையிலான பனிப்போர் வெட்ட வெளிச்சமானது, தான் தலைமையேற்றிருக்கும் கழக மகளிரணிக்கு கனிமொழி அனுப்பியிருந்த ஒரு சுற்றறிக்கையில்தான். டிசெம்பர் மாதம் 26-ம் தேதி, தன்னுடைய ருவிட்டர் பக்கத்தில் அந்தச் சுற்றறிக்கையைப் பதிவிட்டார் கனிமொழி. "தமிழகத்தின் மக்கள்தொகையில் சரிசமமான பங்குடையவர்கள் பெண்கள். நமது கழகத்தின் எதிர்காலத்தை உருவாக்குவதில் இளம்பெண்களின் பங்கு இன்றியமையாதது. அந்தவிதத்தில், இன்றிருக்கும் 18-30 வயதுக்குள்ளான இளம்பெண்களை நமது கழகத்தின் 'மகளிரணி உறுப்பினர்களாக' இணைத்து, அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

பொதுவாக தி.மு.க அணிகளின் மாநில நிர்வாகிகள் இது போன்ற கடிதம், சுற்றறிக்கைகளை வெளியிட்டால், அவை 'முரசொலி'யில் வெளியாவது வழக்கம். ஆனால், இந்தச் சுற்றறிக்கை முரசொலியிலும் வெளியாகவில்லை. 'உதயநிதியை எதிர்த்து எழுதப்பட்ட இந்தச் சுற்றறிக்கை, அவர் நிர்வாக இயக்குநராக இருக்கும் முரசொலியில் எப்படி வெளிவரும்?' என்கிறது கனிமொழிக்கு நெருக்கமான வட்டாரம்.

**பற்றவைத்த செந்தில் பாலாஜி!**

கடந்த டிசம்பர் 26-ஆம் திகதி, அமைச்சர் செந்தில் பாலாஜி ஏற்பாட்டில் கோவையில் தி.மு.க நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில், புதிதாக 2,000 இளம்பெண்களை தி.மு.க இளைஞரணிக்குள் சேர்த்தனர். இந்தத் தகவல் கனிமொழிக்குத் தெரிந்தவுடன், 'நாம இவ்வளவு சொல்லியும் கூட்டம் நடத்தி, பெண்களை இளைஞரணிக்குள் சேர்க்கறாங்கன்னா என்ன அர்த்தம்... சென்னையிலருந்து உத்தரவு வராமல், ஒரு அமைச்சரால தன்னிச்சையாக இப்படிச் செய்ய முடியுமா?' என்று அவர் வட்டாரத்துக்குள் புகைச்சல் அதிகமானது.

அதன் பிறகுதான், அந்தச் சுற்றறிக்கை வெளிவந்தது. அது குறித்து தங்கையிடம் கேள்வி கேட்க முதல்வருக்கும் தயக்கம். ஆனால், சுற்றறிக்கை ஏற்படுத்திய அதிர்வு இன்றுவரை நின்றபாடில்லை. கடந்த சில மாதங்களாகவே கனிமொழியைக் கட்சிக்குள் ஓரங்கட்டும் போக்கு அதிகரித்திருப்பதும், கனிமொழிக்கு எதிராகக் கட்சியின் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி தொடர்ந்து உள்ளரசியல் செய்துவருவதுமே இந்தச் சுற்றறிக்கை விவகாரம் வெடிப்பதற்கு முக்கியக் காரணம்" என்றனர்.

**முடக்கப்பட்ட கனிமொழி!**

கனிமொழி மீது தி.மு.க சீனியர்கள் பலருக்கு அளப்பரிய பாசம் எப்போதும் உண்டு. குறிப்பாக, தலைவரின் மறைவுக்குப் பிறகு, இந்த அபிப்ராயம் பன்மடங்கு அதிகரித்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். ஜனவரி 5ஆம் திகதி, கனிமொழியின் 54 ஆவது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. உதயநிதி பிறந்த நாள் வாழ்த்து சொல்லாத நிலையிலும், துரைமுருகன், கே.என்.நேரு, எ.வ.வேலு, சக்கரபாணி, அனிதா ராதாகிருஷ்ணன், கீதா ஜீவன், பெரியகருப்பன், நாசர் என 15 அமைச்சர்கள் சி.ஐ.டி காலனிக்கு வந்து வாழ்த்து சொன்னார்கள். உள்துறை அமைச்சர் அமித் ஷாகூட அந்நாளில் வாழ்த்தினார்.

'ஸ்டாலினுக்கு அடுத்தபடியாக கனிமொழிக்கு மரியாதை கொடுக்கப்பட வேண்டும்' என்பதே பலரின் எண்ணமாக இருக்கிறது. இந்த எண்ணம்தான் உதயநிதி தரப்புக்குப் பிடிக்கவில்லை. மாநிலத்துக்குள் அரசியல் செய்ய விரும்பிய கனிமொழியை, குடும்பத்துக்குள் அரசியல் செய்து எம்.பி-யாக்கி டெல்லிக்கு அனுப்பிவைத்தனர். கருணாநிதி இருந்த வரையில், டில்லியின் முகமாக முரசொலி மாறனுக்குப் பிறகு கனிமொழிதான் இருந்தார். சோனியா காந்தி, ராகுல் காந்தியுடன் எந்நேரம் வேண்டுமானாலும் பேசக்கூடிய தொடர்புகளோடு அவர் பணியாற்றினார். அதனால்தான் கருணாநிதி உடல்நிலை குன்றியிருந்த போது, அவரைப் பார்க்க மோடி கோபாலபுரம் வீட்டுக்கே வந்தார். அந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தது கனிமொழிதான். இது அப்போதே குடும்பத்துக்குள் சிலரின் கண்களை உறுத்தியது. அகில இந்தியத் தொடர்பும், ஆங்கிலத்தில் சிறப்பாகப் பேசுவதும், கருணாநிதியைப்போல இலக்கியத்தில் ஆளுமை கொண்டிருப்பதும் எதிர்காலத்தில் தங்களுக்கு அச்சுறுத்தலாகிவிடும் என்று குடும்பத்துக்குள்ளேயே கணக்கு போட்டனர் சிலர். இதனாலேயே, ராஜ்ய சபா தி.மு.க குழுத் தலைவராக இருந்த கனிமொழிக்கு, நாடாளுமன்றக்குழுவின் துணைத் தலைவர் என்கிற பதவியை மட்டும் வழங்கி டில்லியிலும் அவரை முடக்கிவிட்டார்கள்.

இப்போது, தி.மு.க மகளிரணியினர் நடத்தும் கூட்டங்களில், 'உதயநிதியின் படமும் பேனர்களில் இடம்பெற வேண்டும்' என்று தலைமையிலிருந்தே 'அன்புக் கட்டளை' இடப்படுகிறது. இதேபோல, இளைஞரணிக் கூட்டத்தில் மகளிரணிச் செயலாளர் என்று கனிமொழி படம் இடம்பெறுமா? 'மகளிரணியில் நிர்வாகிகள் நியமனம் அந்தந்த மாவட்டச் செயலாளர்களின் ஒப்புதலுடனேயே நடக்க வேண்டும்' என்கிறார்கள். மாவட்டச் செயலாளர்களோ, உதயநிதியிடம் நிர்வாகிகள் பட்டியலைக் காட்டிய பிறகே கனிமொழிக்கு அனுப்புவதை வழக்கமாக்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் கனிமொழியால் எப்படிப் பொறுமையாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியும்?" என்றார்கள்.

**சங்கமத்திலும் சங்கடம்!**

'சென்னை சங்கமம்' என்கிற பெயரில் 2007 ஆம் ஆண்டு முதல், நான்கு ஆண்டுகள் கலை நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார் கனிமொழி. மறைந்துகொண்டிருக்கும் கிராமியக் கலைகளுக்கு உயிரூட்டும் விதமாக இருந்ததால், அந்த நிகழ்ச்சிக்குப் பெரும் வரவேற்பும் இருந்தது. அ.தி.மு.க-வின் பத்தாண்டு ஆட்சிக்குப் பிறகு, மீண்டும் இப்போது தி.மு.க அரியணை ஏறியிருக்கும் நிலையில், சங்கமம் நிகழ்ச்சியை மீண்டும் நடத்தக் கோரி நாட்டுப்புறக் கலைஞர்கள் கோரிக்கைவைத்தனர். ஆனால், தி.மு.க தலைமையில் வேறு கணக்கு போடப்பட்டது. சங்கமம் நிகழ்ச்சியை நடத்தினால் கனிமொழியை உள்ளே கொண்டுவர வேண்டும் என்பதால், அதே நிகழ்ச்சியை 'நம்ம ஊரு திருவிழா' என்று பெயர் மாற்றம் செய்து தமிழக அரசின் கலை பண்பாட்டுத்துறை ஒருங்கிணைப்பில் நடத்த முடிவெடுக்கப்பட்டது. கொரோனா பரவல் காரணமாக, அந்த நிகழ்ச்சி ரத்துசெய்யப்பட்டாலும், அடுத்த ஆண்டு மாவட்டவாரியாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு, தன்னை ஓரங்கட்டுவதற்காகவே தனி ட்ராக்கில் முன்னெடுக்கப்படுவதாக நினைக்கிறார் கனிமொழி.

கனிமொழியின் தீவிர ஆதரவாளர் கூறும்போது, "கட்சி ரீதியான சங்கடங்களை எப்போதும் அமைதியாகவே கடப்பவர் கனிமொழி. ஆனால், தன்னுடைய அதிகாரத்தைக் கட்சிக்குள் மட்டுப்படுத்துவதுபோல உதயநிதி செயல்படுவதைத்தான் அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சற்குண பாண்டியன் மறைவுக்குப் பிறகு, அவர் வகித்த துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பு கனிமொழிக்கு வந்திருக்க வேண்டும். பெண் ணுரிமை, சமநீதி எனப் பேசுபவர்கள் இதைச் செய்திருக்க வேண்டும். கனிமொழிக்கு அந்தப் பதவி கிடைத்துவிடக் கூடாது என்பதில் சிலர் குறியாக இருந்து, ஜெயித்தும்விட்டனர். ஆனால், இந்த முறை கனிமொழி அமைதியாக இருக்கப்போவதில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுதான் அந்தச் சுற்றறிக்கை " என்றனர்.

'பெரிய எதிர்பார்ப்புகளின்றி, தலைமை கொடுக்கும் பணிகளில் மட்டும் கவனம் செலுத்திவருபவர் கனிமொழி. ஆனால், அவர் எதிர்காலத்தில் போட்டியாக வந்துவிடுவாரோ என்கிற அச்சத்தில், அவருக்கு உதயநிதி தரப்பு தொடர்ந்து பல்வேறு மறைமுகச் சங்கடங்களைக் கொடுத்துவருகிறது. பொறுமை கடந்து, முதன்முறையாக மௌனம் கலைத்திருக்கிறார் கனிமொழி. சங்கடங்கள் தொடரும் பட்சத்தில், கனிமொழி 'கணீர்' மொழியாக ஓங்கி ஒலிக்கவும் வாய்ப்பிருக்கிறது' என்கிறார்கள் விவரமறிந்தவர்கள். தங்கைக்கும் மகனுக்கும் இடையிலான பனிப்போரில், ஸ்டாலின் என்ன நிலைப்பாடு எடுக்கப்போகிறார் என்பதுதான் தமிழக அரசியலின் அனல் கேள்வி!

**- விகடன்**

# கழுத்தை நெரிக்கும் விலைவாசி நிலைமையில் மாற்றம் வருமா?

அன்பரசன் எத்திராஜன்

“சமையல் எரிவாயுவின் விலை கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகரித்துவிட்டது. இதற்கு மேலும் எங்களால் சிலிண்டரை வாங்க முடியாது” என்கிறார் நிலுகா தில்ருக்சி. 31 வயதான நான்கு குழந்தைகளுக்குத் தாயான நிலுகா தன் குடும்பத்தினருக்கு எப்போதும் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்திதான் சமைத்து வந்தார். ஆனால் தற்போது விறகு மட்டுமே ஒரே வழி என்கிறார்.

“என் குழந்தைகளுக்கு நான் தினமும் மீன் மற்றும் காய்கறி கொடுத்து வந்தேன். இப்போது ஒரு காய்கறி மற்றும் அரிசிச் சோறு மட்டுமே கொடுத்து வருகிறோம்” என்கிறார் நிலுகா. “முன்பு நாளொன்றுக்கு மூன்று வேளையும் சாப்பிட்டு வந்தோம். இப்போது சில நேரங்களில் நாளுக்கு இரு வேளை மட்டுமே சாப்பிட முடிகிறது”.

நிலுகா மற்றும் அவரது குடும்பத்தினர் இலங்கையில் கொழும்பின் புறநகர் பகுதியில் வசித்து வருகின்றனர். அவரது கணவர் ஒரு தினக் கூலியாக இருக்கிறார். அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம். குறிப்பாக உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் திணறுகின்றனர்.

கடந்த நான்கு மாத காலத்தில் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 7.50 அமெரிக்க டொலரிலிருந்து 13.25 டொலராக 76.6 விலை அதிகரித்துள்ளது.

2.2 கோடி மக்கள் வாழும் தீவு நாடான இலங்கை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. கடந்த நவம்பர் மாதத்தில் அந்நியச் செலாவணி கிட்டத்தட்ட 1.6 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு சரிந்துவிட்டது. அது சில வார இறக்குமதி செலவுகளை மட்டுமே எதிர்கொள்ளப் போதுமானது.

அதன் விளைவாக அரசு சில அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளைக் குறைக்க வேண்டி வந்தது. அதில் உணவுப் பொருட்களும் அடக்கம். இது போக எரிபொருள் மற்றும் சரக்கு போக்குவரத்து விலை அதிகரிப்பால் பால் மா மற்றும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையை இன்னும் அதிகரித்தது.

விலைவாசி அதிகரிப்பு இலங்கை மட்டுமே எதிர்கொள்ளும் பிரச்னையல்ல. இந்தியா பாகிஸ்தான் போன்ற மற்ற ஆசிய நாடுகளும் பணவீக்கத்தை எதிர்கொண்டு வருகின்றன. ஆசிய கண்டத்தில் வாழும் மக்கள் தங்களின் தினசரி உணவு மற்றும் எரிசக்தி செலவுகளைச் சமாளிக்க மற்ற செலவுகளைக் குறைத்து வருகிறார்கள்.

தன் நாட்டு மக்களின் உணவுக்கே வெளிநாட்டு இறக்குமதிகளை அதிகம் நம்பி இருக்கும் சிறிய தீவு நாடான இலங்கையில் இந்த விலைவாசிப் பிரச்னை மோசமாக இருக்கிறது. உதாரணத்துக்கு, அந்நாட்டின் சிறிய பால் உற்பத்தித் துறையால் உள்ளூர் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே பால் மாவை இறக்குமதி செய்கிறது இலங்கை.

**சந்தை நிலவரம்**

கொழும்புவில் உள்ள ஜன நெருக்கடி மிகுந்த முக்கிய காய்கறி சந்தையில் டஜன் கணக்கிலான கடை உரிமையாளர்கள் கரட் பீட்ரூட் கறிவேப்பிலை என பல காய்கறிகளை விற்கிறார்கள். விலைவாசி அதிகரிப்பது குறித்து பல கடை உரிமையாளர்கள் வெளிப்படையாக புகார் கூறுகிறார்கள். மேலும் விலையைக் குறைக்கவும் குறைந்த அளவில் காய்கறி வாங்குவதைக் தவிர்க்கவும் நிறைய பேரம் பேசுவதாகக் கூறுகின்றனர்.

“தற்போதைய மாதாந்திர சம்பளத்தைக் கொண்டு இரு வாரங்கள் மட்டுமே வாழ முடியும். காரணம் விலை வாசி அதிகரித்துவிட்டது. எங்களின் எதிர்காலம் குறித்து எங்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. அரிசியின் விலை கூட அதிகரித்து விட்டது. அரசு நடத்தும் கடைகளின் முன் நீண்ட வரிசை நிற்கிறது” என பொருள் வாங்க வந்தவர்களில் ஒருவரான சுவர்ணா விளக்கினார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தேவை உச்சத்தில் இருக்க இலங்கையில் உணவுப் பொருட்களின் விலை வருடாந்திர அடிப்படையில் கடந்த மாதம் 21.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பால் மாவின் விலை 12.5% அதிகரித்திருப்பதால் தேநீர் கடை உரிமையாளர்கள் சங்கம் பால் தேநீர் விற்பதை மொத்தமாக நிறுத்த முடிவு செய்துள்ளனர். தேவை ஏற்பட்டால் மட்டும் அதிக விலைக்கு பால் தேநீர் விற்பனை செய்யப்படும் என்று கூறுகின்றனர்.

“உணவு விலை அதிகரிப்பை மிகவும் தீவிரமாகக் கருதுபவர்கள் இலங்கை மக்கள். ஏற்கனவே நாங்கள் எதிர்கொள்ளும் கட்டுப்பாடுகளால் நிறைய எதிர்மறை உணர்வுகள் நிலவுகின்றன” என்கிறார் வெரைட் ரிசர்ச் என்கிற சிந்தனைக் குழுவைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் தேஷல் டி மெல். “இதே அளவில் விலைவாசி அதிகரித்தால் அது சகிப்புத்தன்மையை இழக்கும் கட்டத்துக்கு வெகு அருகே அவர்களை கொண்டு செல்லலாம் என நான் கருதுகிறேன்” என்கிறார் அவர்.

2022 புத்தாண்டுக்கு முன் இலங்கை அரசு தன் அந்நிய செலாவணியை 3.1 பில்லியன் அமெரிக்க டொலராக கரன்சி மாற்று ஒப்பந்தங்கள் மூலம் அதிகரித்தது.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் 45 பில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. அக்கடன்களுக்கு வட்டி கட்ட மட்டும் 6 பில்லியன் டாலர் தேவை. பாகிஸ்தான் மாலை தீவு போன்ற நாடுகளும் இதே நிலையைத்தான் எதிர்கொண்டு வருகின்றன.

கொரோனா பெருந்தொற்று மற்றும் உலக அளவில் அதிகரித்து வரும் எரிபொருள் விலை ஏற்றம் ஆகியவை இலங்கையின் பிரச்சனையையும் அதிகரித்து விட்டன. பெருந்தொற்று காரணமாக இலங்கையின் மிகப்பெரிய வருவாய் தொழிலான சுற்றுலா பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு, சுற்றுலா மூலம் இலங்கை 4 பில்லியன் அமெரிக்க டொலரை வருவாயாக ஈட்டியது. கொரோனாவால் அதில் கிட்டத்தட்ட 90 வீத வருவாய் சரிவை எதிர்கொண்டுள்ளது.

“பெருந்தொற்றினால் நடப்புக் கணக்கு பற்றாக்குறை மற்றும் வர்த்தகப் பற்றாக்குறை மீதான அழுத்தம் அதிகரிப்பு காரணமாக, நாங்கள் இறக்குமதிகள் மீது கட்டுப்பாடு விதிக்க வேண்டி இருந்தது. ஒரு பொறுப்புள்ள அரசாக நாங்கள் அதை நிர்வகிக்க வேண்டும்” என இலங்கை அமைச்சர் சேஹன் சேமசிங்கே கூறினார்.

எதிர்கட்சியினரோ விலைவாசி ஏற்றத்தைக் எதிர்த்து போராட்டங்களை நடத்தினர் “இப்பிரச்சனை நீண்ட காலமாக உருவாகிக் கொண்டிருந்தது. எங்கள் சக்திக்கு மீறி நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் உற்பத்தி செய்வதை விட அதிகம் நுகர்கிறோம்” என்கிறார் இலங்கையின் எதிர்ட்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் பொருளாதார சீர்திருத்த அமைச்சரான ஹர்ஷா டி சில்வா.

மக்கள் தரப்பில் அதிகரித்து வரும் கோபத்தைக் குறைக்க அரசு சமீபத்தில் கூ1 பில்லியன் டாலருக்கு ஒரு நிவாரணத் திட்டத்தை அறிவித்தது, அதில் அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் ஓய்வூதிய உயர்வும் அடக்கம். சில உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் மீதான வரியை நீக்கியது, ஏழை மக்களுக்கு வருமான உதவியையும் அறிவித்தது.

சர்வதேச கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக, சராசரியாக ஒரு கண்டெயினர் ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்கு அனுப்புவதற்கான செலவு கடந்த 2020ஆம் ஆண்டில் 2000 டொலராக இருந்தது, கடந்த ஆண்டு 10000 டொலராக அதிகரித்துள்ளது.

போக்குவரத்து செலவீனங்கள் அதிகரிப்பு மீண்டு வரும் பொருளாதார வளர்ச்சியை பாதிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு அமைப்பு எச்சரித்தது. தங்கள் இறக்குமதிக்கு கடல்வழி போக்குவரத்தை பெரிதும் நம்பி இருக்கும் இலங்கை போன்ற சிறிய தீவு நாடுகள், இறக்குமதி விலை ஏற்றத்தால் கடுமையாக பாதிக்கப்படலாம் என அவ்வமைப்பின் மதிப்பீடுகள் கூறியுள்ளன.

எரிபொருள் விலை ஏற்றம் மற்றும் மின்சார விலை ஏற்றம் மொத்த விலை யில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதோடு போக்குவரத்து சேவை வழங்குபவர்களும் தங்கள் கட்டணத்தை அதிகரிக்கிறார்கள். இலங்கையின் அண்டை நாடான இந்தியாவில், வரலாறு காணாத வகையில் கடந்த நவம்பர் மாதம் வருடாந்திர மொத்தவிலைக் குறியீடு 14.2 சதவீதத்தைத் தொட்டது.

பாகிஸ்தானில் நுகர்வோர் பணவீக்கக் குறியீடு கடந்த டிசெம்பர் மாதத்தில் 12.3 விதத்தை தொட்டது. இது கடந்த இரு ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரிய உயர்வு. உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை ஏற்றத்துக்கு அதிகரித்து வரும் எரிபொருள் விலை ஏற்றம் காரணமாகக் கூறப்படுகிறது.

2021ஆம் ஆண்டில் உலகளாவிய உணவு விலைக் குறியீடு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 28 விதமாக அதிகரித்துள்ளது என உணவு மற்றும் விவசாய அமைப்பின் தரவுகள் கூறுகின்றன.

“உள்ளீட்டுப் பொருட்களின் விலை அதிகரிப்பு உலகளவில் சுழ்ந்திருக்கும் கொரோனா பெருந்தொற்று நிலையற்ற காலநிலை ஆகியவை 2022ஆம் ஆண்டில் கூட மீண்டும் நிலையான சந்தைக்குத் திரும்புவது தொடர்பாக குறைவாகவே நம்பிக்கையளிக்கின்றன” என்கிறார் உணவு மற்றும் விவசாய அமைப்பின் மூத்த பொருளாதார வல்லுநர் அப்டொல்ரெசா அப்பாஷ்ஷியன்.

மறுபக்கம் கொழும்புவில் ஏற்கனவே தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலுகா தில்ருக்சி போன்ற வெகுஜன மக்கள் பொருட்களின் விலை இன்னும் கொஞ்சம் அதிகரித்தால் கூட தொடர்ந்து குடும்பத்தை நடத்துவது மிகவும் சிரமமாகிவிடும் என கவலையில் உள்ளனர். **- பி.பி.சி.**



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

14. 'யெஹலிய' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
: ..............................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.
பால் குடியுங்கள் : ..............................................

16. 'ஆறாயிரத்து இருபத்து மூன்று' எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.
: ..............................................

17. 16999 இலும் 2 கூடிய எண் யாது?
: ..............................................

18. 7450 எனும் எண்ணில் இலக்கம் 4 இனால் குறிக்கப்படும் பெறுமானம் யாது?
: ..............................................


19. 10 *l* நீரைக் கொள்ளக்கூடிய ஒரு பாத்திரத்தில் 3 *l* 750 *ml* நீர் உள்ளது. பாத்திரத்தை முற்றாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீரை ஊற்ற வேண்டும்?
: ......................*l* ......................*ml*

20. அரிசிப்பொதி ஒன்றின் நிறை 3kg 900g ஆகும். இன்னொரு அரிசிப்பொதியின் நிறை 2kg 750g ஆகும். அரிசிப்பொதிகளின் மொத்த நிறை யாது?
: ......................kg ......................g

21. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண்கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
(i) 102, 111, 120, ................., 138
(ii) 5, 10, 20, 40, .................

22. பி.ப. 1.20 என்பது இருபத்து நான்கு மணிக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.
: ..............................................


23. எதிரே தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



24. 36 தோடம்பழங்களில் $\frac{1}{4}$ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?
: ..............................................

25 
உருவில் உள்ள உருளையில் இருக்கும்,
(i) முகங்களின் எண்ணிக்கை யாது? : ...........................
(ii) வளைந்த, விளிம்புகளின் எண்ணிக்கை யாது? : ...........................

26. கீழே உருவில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு?




: ........................... cm

27. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.

| பாடசாலை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| A | 245 |
| B | 740 |
| C | 390 |

(i) A பாடசாலை, C பாடசாலை ஆகிய இரண்டிலும் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?
: ..............................................

(ii) பாடசாலை B இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது A, C ஆகிய பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?
: ..............................................

28. 621 தேங்காய்கள் சம எண்ணிக்கையுள்ள மூன்று குவியல்களாகப் பங்கிடப்பட்டன. ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?
: ..............................................

## விடைகள்

14. நன்றி
15. கிரி பொன்ன
16. 6023
17. 17001
18. 400
19. 6, 250
20. 6, 650
21. (i) 129
(ii) 80
22. 13:20
23. (பொருத்தமாக நிறந்தீட்டியிருப்பின் புள்ளி வழங்குக.)
24. 27
25. (i) 2 / இரண்டு
(ii) 2 / இரண்டு
26. 6
27. (i) 635
(ii) 105
28. 207

## கல்வி tv CHANNEL-1

14.01.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி tv CHANNEL - 2

14.01.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# தைப்பொங்கல் வாழ்த்துச் செய்திகள்

## பசுமை விவசாயத்துக்கு உற்சாகம் ஊட்டட்டும்



விவசாயம் செழிப்படையக் காரணமான சூரிய பகவானுக்கு நன்றி நவிலும் தைப்பொங்கல் தினம், இந்துக்களின் சிறப்புமிக்க கலாசாரம் மற்றும் மத ரீதியிலான பண்டிகையாக விளங்குகின்றது. உலக வாழ் இந்துக்களுடன் இணைந்து இப்பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர மக்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தைப்பொங்கல் தினப் பாரம்பரியக் கொண்டாட்டங்களைக் கலாசார ரீதியாகச் சிறப்பாகக் கொண்டாடுவதன் மூலம், எதிர்காலத்தில் வளமான பயிர் அறுவடைக்கு சூரிய பகவானின் ஆசீர்வாதங்களும் பாதுகாப்பும் கிடைக்கின்றன என்பதே இந்துக்களின் நம்பிக்கையாகக் காணப்படுகின்றது.

சுபீட்சத்துக்கான பிரார்த்தனைகளில் ஈடுபடும் வகையில் இந்துக்களால் முன்னெடுக்கப்படும் சடங்குகள், காலம்காலமாக இலங்கைச் சமூகத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. விவசாய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்துடன் இணைந்த அனைத்து இலங்கையர்களும், தைப்பொங்கல் தினத்தை மிகுந்த மரியாதையுடன் எதிர்பார்க்கின்றனர்.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையுடன் வளமான எதிர்காலத்தை நோக்கிய எமது பயணம், பசுமை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும். இது, பசுமை விவசாயத்துக்கான தேசிய கொள்கைக்குப் பலன் தரும் என்பதே பெரும்பான்மையானோரின் நம்பிக்கையாக இருக்கின்றது. அதற்கான நோக்கத்துக்கு இந்தத் தைப் பொங்கல் கொண்டாட்டம் மிகுந்த உற்சாகத்தைத் தருவதாக நான் நம்புகிறேன்.

பாதுகாப்பான நாட்டின் செழிப்பு மற்றும் வளத்துக்காக அர்ப்பணித்துள்ள உங்களுக்கு, சூரிய பகவானின் ஆசீர்வாதமும் பாதுகாப்பும் எப்போதும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ**
*ஜனாதிபதி.*

## இன, மத பேதம் கடந்து பொங்குவோம்!



பண்டைய காலந்தொட்டு உலக சமுதாயம் பலவற்றாலும் கொண்டாடப்பட்ட ஒரு விழா - அறுவடை விழா. இதுவே உலகத் தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்கின்ற தைப்பொங்கல் விழாவுக்கான அடிப்படையாகும்.

தைத்திருநாள் உலகெங்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் மத, கலாசார மற்றும் சமூக ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும். தமிழர்கள் தம் வாழ்வில் கொண்டாடி மகிழ்கின்ற பண்டிகைகளில் உன்னதமானதொரு நிகழ்வு இந்த தைத்திருநாளாகும்.

உழவர் பெருமக்கள் தங்களின் கடின உழைப்புக்கு பயன் நல்கிய இயற்கைக்கு, தமது நன்றியுணர்வைத் தெரிவிக்கும் திருநாளாக இத்தைத்திருநாள் விளங்குகின்றது. அதனால், இத்தைப்பொங்கல் திருநாளிலே அனைவரும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தி மகிழ்கின்றனர். இயற்கையின் பெருமைக்கு முக்கியத்துவம் நல்கும் இத்திருவிழா, நன்றி மறவாத உன்னத பண்பை நம் அனைவருக்கும் எடுத்தியம்பி நிற்கிறது.

இனம், மதம், மொழி ஆகியவற்றினால் நம் தேசம் வேறுபட்டிருந்தாலும் - நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்று சொல்வதிலே பெருமை கொள்வோம். நம் அனைவரினதும் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஒன்றாக அமைவதே இத்தேசத்தின் சுபீட்சத்துக்கான அத்திவாரம்.

நாட்டைக் கட்டியெழுப்பும் "சுபீட்சத்தின் நோக்கு" என்ற உன்னத இலட்சியத்துடன் இலங்கை மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இலங்கையில் மட்டுமல்லாமல் உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடும் இத்தைத்திருநாளானது இன, மத பேதம் கடந்து அனைவரும் கொண்டாடி மகிழும் உன்னத பொங்கல் விழாவாக மாறிவிட்டமை மகிழ்வளிக்கிறது. இந்த மாற்றம் நம் தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலர வேண்டும்.

அனைத்து மக்களும் நிறைந்த சௌபாக்கியத்துடன், அமைதியும் சமாதானமும் நின்று நிலைக்கும் வகையில், மகிழ்வோடு வாழ இந்த நன்னாளிலே எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இந்த மகிழ்ச்சியான நன்னாளிலே, தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருக்கும் எம் சக உறவுகளாகிய தமிழ் உறவுகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கிறேன்.

**மஹிந்த ராஜபக்ஷ**
*பிரதமர்.*

## விடிவுக்காக பிரார்த்திப்போம்



அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

சைவத் தமிழர் பண்பாட்டில் தைப்பொங்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். இயற்கைத் தெய்வமாகிய சூரியனைக் கண்கண்ட தெய்வமாக வணங்குபவர்கள் தமிழர்கள். வீடு விடிய வேண்டும், நாடு விடிய வேண்டும் எனப் பிரார்த்தனை செய்வதற்காகப் பொங்கிப் படைக்கும் திருநாள் தைப்பொங்கலாகும். வீட்டு முற்றத்தில் சாணியால் மெழுகி மாவினால் கோலமிட்டுக் குத்து விளக்கு ஏற்றிப் படையல் வைத்துப் பகலவனாகிய சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளே தைப்பொங் கலாகும். பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக் களுக்கும் நன்றி செலுத்தும். இத்திருநாளில் அனைவரும் ஒன்றுபட்டு வழிபாடு செய்வோம்.


இயற்கை வளம் செழிக்க வேண்டும். அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும். தர்மம் நிலைக்க வேண்டும் என நாம் கடவுளிடம் மன்றாட வேண்டிய திருநாள் தைப்பொங்கல் ஆகும். எம் மண்ணில் நீதியான வாழ்வு கிடைக்கவும் வளங்கள் செழிக்கவும் மனதார வழிபாடு செய்வோம்.

ஈழத் தமிழர்களிடையே உண்மையான ஒற்றுமை உருவாக வேண்டும் என்று ஓங்கி குரல் கொடுப்போம். எமது பாரம்பரியக் கலைகள், மரபுகள் சிதைந்து விடாது பாதுகாக்க முன்வருவோம். பள்ளித் தலங்களில் கல்வியையும், ஒழுக்க பண்புகளையும் எமது தலைமுறை நிறைவாக கற்றுக் கொள்ள வழி செய் வோம்.

வீண்விரயத்தை தவிர்த்து உழைப்பினால் கிடைக்கும் ஒவ்வொரு துளி வருமானத்தையும் பக்குவமாய் பயன்படுத்துவோம். தீராத நோய்கள் அகலவும், வறுமைப்பிணி அகலவும் இந்நாளில் இறைவனை மன்றாடுவோம். சிறைக்கூடங்களில் தமிழ்மொழிக்காகவும், எம் இனத்துக்காகவும் வாழும் வயதில் வாடி நிற்பவர்கள் விடுதலை பெற்று விடிவு பெற உருக்கமாக பிரார்த்திப்போம். தைப்பொங்கல் திருநாளில் அனைவருக்கும் இதயபூர்வமான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு திருமுருகன்**
*தலைவர்,*
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்.

## தமிழர் ஆட்சி தழைத்திட பொங்கிடுவோம்!



இயற்கையில் சூரியனால் ஒளியும் பகலும் அதனால் மழையும் நீர்நிலைகளும் வெட்பதட்ப நிலை காலங்களும் வேளாண் தொழில் துறையும் மக்கள் உழுதுண்டு வாழ வழியும் அதற்கு நன்றி செலுத்தும் தமிழர்களின் பண்பாடும் தமிழர் நாகரிகமாய் போற்றப்படு வதே தைப்பொங்கல் விழாவாகும்.

ஆண்டுதோறும் மழையும் நீர்நிலையும் நிலவளமும் நெல்விளைச்சலும் மார்கழியில் நிறைந்து அறுவடையின்பின் தை பிறக்கும் காலம் தைத்திங்களில் குடிகளில் செல்வம் நிறைவதால் வளம்பெறும் மக்கள் விழாவெடுத் துக் கொண்டாடும் வழமையின் அடையாளமே நாகரிகத்தின் பிரதிபலனே 'தை பிறந்தால் வழி பிறக்கும்' எனத் தைத்திங்களிலே மக்கள் பொங்கல் விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

உழைக்கும் தமிழர் வாழும் உலகெங்கும் தை பிறந்ததும் முதல் நாளிலே தோரணமும் மாவிலையும் கட்டி, இயற்கைக்கு நன்றி தெரிவித்து வேளாண் நிலத்தின் நெல் விளைச்சலில் புத்தரிசியும் மாட்டின் பாலும் கரும்புச் சாறும், சுவை தரும் முந்திரி ஏலம் முதலானவும் கலந்து பொங்கல் புதுப்பானையில் மூட்டிய தீச்சுவாலையில் கொதிக்க வைத்துப் பொங்கி வரும் போது பொங்கலோ பொங்கலென்று கூவி ஆதவனை வணங்கி பொங்கல் படைத்து கூடி நிற்கும் மக்களும் மாடும் கூடி நிற்கும் வேளை இதயம் பொங்கி மகிழ்ச்சியில் திழைத்திடும் மக்கள் வேளாண்மக்கள் தைப்பொங்கல் பொங்கிக் கொண்டாடுவர்.

தைப்பொங்கல் விழாவெடுக்கும் தமிழர் பண்பாட்டை நாகரிகத்தைப் போற்றினோம், மனமகிழ நினைவு கொண்டோம். ஆனால் இன்று வரப்புயர நீர் உயர நெல் உயர கோன் உயரவில்லை, குடி உயரவில்லை, விளைச்சலில்லை செல்வம் திரளவில்லை, பசியும் பட்டினியும் உயிர்களைக் காவு கொள்ளும் கொரோனா ஊழிக் கொடுநோய் பரவலும் கோனில்லாக் குடிகளாய் உயிருக்காய் போராடும் காலமாய் மக்கள் வீழ்ந்து கிடக்கின்றனர்.

அதிலும் இலங்கைத் தமிழர் விடுதலையின்றி அடிமைத்தளை அறுக்கப் போராடி மடியும் மக்களாய் ஆட்சி இன்றி ஆளும் நிலமின்றி வாழும் உரிமையற்று விடிவின்றி புத்தரிசிப் பொங்கலின்றி இதயம் பொங்காத ஏதிலிகளாய் வீழ்ந்து கிடக்கின்றோம். விடிவுதான் எப்போது என ஏங்கி நிற்கும் தமிழ்க் குலமே என்ன செய்ய நினைக்கிறாய்? தை பிறந்தால் வழிபிறக்கும் என்று புதிய நம்பிக்கை பொங்கிஇ தமிழர் தாயக நிலத்தில் தமிழர் ஆட்சி தழைத்திட நாமெல்லாம் ஒன்றுபட்டுஇ திடசங்கற்பம் கொண்டு பொங்கித்தானாக வேண்டும். இதயம் பொங்கிடுவோம், வாழ்க, வளமுடன்.

**மாவை.சோ.சேனாதிராசா**
*தலைவர்,*
*இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.*

## சுதந்திர வாழ்வை வென்றெடுப்போம்!



நன்றிக்கு தலை வணங்குதல் என்பது தொன்று தொட்டு நிலவி வரும் தமிழர் பண் பாட்டு வழிமுறையாகும். உழுதுண்டு வாழும் உழவர் மக்களின் விளை நிலங்கள் யாவும் செழித்து வளர உதவிய சூரியனுக்கு நன்றிக் கடன் செலுத்துவதோடு மட்டுமன்றி, எமது மக்கள் தம் வாழ்வெங்கும் தம்மோடு கூடவே இருந்து தம் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வருவோர்க்கும், அறம் சார்ந்த, அவலங்கள் இல்லாத யதார்த்த வழிமுறையில் தம்மை வழி நடத்தி செல்வோருக்கும் நன்றி செலுத்தும் பண்பாட்டையும் இன்னமும் அதிகமாக நேசிக்க வேண்டும்.

தை பிறந்தால் வழி பிறக்கும்... வழி பிறந்தால் தம் வாழ்வு செழிக்கும்...! இதுவே எமது மக்களின் ஆழ்மன நம்பிக்கை! ஆனாலும், நம்பிக்கைகளும் அதற்கான வேண்டுதல்களும் மட்டும் இருந்தால் போதாது. குறையிலா உயிர்கள் வாழும் மகிழ் காலத்தையும் தமது எதிர்காலத்தையும் எமது மக்கள் தாமே உருவாக்கும் தீர்மானங்களை தம் கைகளில் எடுக்க வேண்டும்!

உங்கள் இலட்சியத்தில் தோற்றீர்களானால், சூட்சுமத்தை மாற்றுங்கள், இலட்சியத்தை அல்ல என்ற கீத தர்ம உபதேசங்களை ஏற்று, எமது மக்கள் தமது கனவுகளை எட்டுவதற்கு தோற்றுப்போன வழிமுறைகளை கைவிட்டு, நடைமுறை சாத்தியமான சிந்தனைகளை ஏற்று நடந்தால் உரிமை நோக்கி வெற்றியின் நம்பிக்கையோடு நடக்க முடியும்.

உலக நாடுகளெங்கும் சூழ்ந்திருக்கும் கொடிய நோயின் தாக்கங்கள் இலங்கை தீவையும் சூழ்ந்திருக்கிறது. சூழ்ந்து வரும் துயர்களை உடைத்து சுபீட்சமான சுதந்திர வாழ்வை சகலரும் பூரணமாக அனுபவிக்கும் மகிழ் காலத்தை விரைவில் வென்றெடுப்போம்!

**டக்ளஸ் தேவானந்தா**
*அமைச்சர்*
கடற்றொழில் நீரியல் வளங்கள்.

# பெரிய இரும்புப் பெட்டி முகாம்களுக்குள் தொற்றாளரை தனிமைப்படுத்தும் சீனா!

*பீஜிங், ஜன. 14*

சீனாவில் கொரோனா வைரஸ் பாதித்தவர்களை பெரிய இரும்பு பெட்டி முகாம் களில் தங்க வைக்கப்பட்டுள் ளதை, காண்பிக்கும் காணொ ளிகள் தற்போது வைரலாக பரவி வருகின்றன.

இதற்காக வரிசையாக இரும் புப் பெட்டிகள் கொண்ட முகாம்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

ஷிஜியாசுவாங் மாகா ணத்தில் 108 ஏக்கர் பரப்பள வில் தனிமைப்படுத்தப்பட்ட வளாகம் அமைக்கப்பட்டுள் ளது

சீனாவின் பீஜிங் மாகாணத் தில் அடுத்த மாதம் குளிர்கால ஒலிம்பிக் தொடர் நடைபெற வுள்ளதையடுத்து கொரோனா இல்லா சீனா என்ற கொள்கை அடிப்படையில், கொரோ னாவை ஒழிக்க லட்சக்கணக் கான மக்களை அந்த நாட்டு அரசாங்கம் தனிமைப்படுத்தி வைத்துள்ளது.



கர்ப்பிணிப் பெண்கள், குழந் தைகள், முதியோர்கள் அனை வரும் ஒரு படுக்கை, கழிப்பறை மட்டுமே உள்ள இரும்புப் பெட்டிகளில் அடைத்து வைக் கப்பட்டுள்ளனர். சீனாவில் யாராவது ஒருவருக்கு கொரோனா ஏற்பட்டால் கூட அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் அழைத்து வரப் பட்டு இரும்புப் பெட்டிகளில் 2 வாரம் வரை தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

55 லட்சம் மக்கள்தொகை கொண்ட அன்யாங்கைத் தவிர மற்ற நகரங்களில் ஓமைக்ரான் பதிப்பு 2 பேருக்கு மட்டுமே கண்டறியப்பட்டு உள்ளது. (அ)

# நாட்டை முடக்கிவிட்டு நடந்த விருந்து: மன்னிப்புக் கோருகிறார் ஜோன்சன்

## பதவியை இழக்கும் இக்கட்டில் அவர்

*லண்டன், ஜன. 14*



பிரிட்டிஷ் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் கொரோனா பொது முடக்க காலத்தில் நாட்டு மக் களை வீடுகளில் அடைத்து விட்டுத் தனது டவுணிங் வீதி அலுவலகத்துக்குப் பலரை அழைத்து ஒன்று கூட்டி விருந்துபசாரம் நடத்தினார் எனக் கூறப்படுகின்ற விவகாரம் அவரது பதவிக்கு ஆபத்தாக மாறியிருக்கிறது.

அரசியலில் சூடுபிடித்தி ருக்கின்ற இந்த விருந்து தொடர்பில் பிரதமர் ஜோன்சன் முதல் முறையாகத் தனது மன்னிப்பை வெளியிட்டிருக் கிறார்.

உத்தியோக ரீதியான ஒரு கூட்டம் என்று எண்ணியே பலரை அங்கு அழைத்ததாக அவர் ஒப்புக்கொண்டிருக்கி றார். நோய்த் தடுப்புப் பணி களை நிர்வகிக்கின்ற தனது அதிகாரிகளை உற்சாகப்படுத்து வதற்காகவே தொழில் முறை யான அந்தக் கூட்டத்துக்குத் தான் அழைப்பு விடுத்திருந்தார் எனவும், விருந்து நடைபெற்ற பூங்கா தனது பணியிடத்தின் ஒரு நீட்சியே என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

கடந்த 2020 மே மாதம் நாடு முதலாவது முடக்கத்தில் இருந்த சமயத்திலேயே "நம்பர் 10, டவுணிங் வீதி" அலுவலகத் தின் பூங்காவில் பலர் ஒன்று கூடிய குடிபான விருந்து நடந் தது. பிரதமர் ஜோன்சன் அவ ரது துணைவியார் உட்பட முப் பது பேர் அதில் பங்குபற்றினர் என்பதைச் சாட்சிகள் உறுதி செய்துள்ளன. வெளி இடங் களில் ஒருவருக்கு மேல் ஆட் கள் கூடுவதுகூடத் தடுக்கப்பட் டிருந்த - மிக இறுக்கமான - கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தனது அலுவலகத்துக்கு வரு மாறு பலரை அழைத்ததைப் பிரதமர் ஒப்புக்கொண்டிருப்ப தால் அந்தத் தவறுக்காக

அவர் பதவி விலக வேண் டும் என்ற குரல்கள் அவரது சொந்தக் கட்சிக்குள்ளேயே எழுந்துள்ளன. எனினும் அவரது அமைச்சரவை அவ ருக்கு முழு ஆதரவை வெளி யிட்டுள்ளது.

பிரதமரது அலுவலகத்துக்கு வெளியே சிலர் எதிர்ப்புத் தெரி விக்கும் பதாகைகளுடன் கூடி யுள்ளனர். அங்கு விருந்து நடைபெற்ற மே மாதத்தில் வைரஸ் தொற்றினால் உயிரி ழந்தவர்கள் சிலரின் உறவினர் களது கருத்துக்களை பி.பி.சி ஒளிபரப்பியுள்ளது. பாராளு மன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் "ஜோன்சன்சட்டத்தை மீறிவிட் டார், பொய் கூறிவிட்டார், தனது அலுவலகத்தை இழிவு படுத்திவிட்டார்" என்று கோஷம் எழுப்பினர்.

அலுவலகத்தில் விருந்து நடந்தது என்ற குற்றச்சாட்டு வெளியாகிய ஆரம்பத்தில் அதனைத் தொடர்ந்து மறுத்து வந்தவர் பொறிஸ் ஜோன்சன். நீண்ட காலத்தின் பின்னர் இப் போது அவர் அதனை ஒப்புக் கொண்டிருப்பது அரசியலில் அவரது நிலையை மிகவும் பலவீனப்படுத்தியிருக்கிறது. (அ)

# உலக நாடுகள் மதிப்புவாய்ந்த கடவுச்சீட்டு குறியீட்டில் சிங்கப்பூர், ஜப்பான் முதலிடம்

*லண்டன், ஜன. 14*

உலக நாடுகள் மதிப்புவாய்ந்த கடவுச் சீட்டுக் கள் தொடர்பான தரப்படுத்தலில் இலங்கை கடவுச் சீட்டு இவ்வாண்டு 102 ஆவது இடத்தைப் பெற்று தரப்படுத்தலில் மோசமான நிலையில் உள்ளது. சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளின் கடவுச்சீட்டுக்கள் 2022 க்கான உலகின் மிகச் சிறந்த கடவுச்சீட்டுகளாக தரப்படுத்தலில் முதலி டத்தைப் பெற்றுள்ளன. இந்த இரண்டு நாடுகளின் கடவுச்சீட்டுகள் உள்ளவர்கள் 192 நாடுகளுக்கு விசா அனுமதி பெறாமல் செல்ல முடியும்.

ஹென்லி பாஸ்போர்ட் குறியீட்டு அறிக்கை யில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இரண்டாம் இடத்தை ஜேர்மனியும் தென்கொரியாவும் பிடித்தன. ஆக மோசமான கடவுச்சீட்டுகளாக ஆப்கானிஸ்தானும் (111) ஈராக்கும் (110) குறிப்பிடப்பட்டன.

2022 இல் உலகின் ஆகச் சிறந்தவையாக வகைப்படுத்தப்பட்டுள்ள முதல் 10 இடங்களை பிடித்த நாடுகளின் கடவுச்சீட்டுக்களும் அந்த நாடுகளின் பிரஜைகள் விசா அனுமதியின்றி பயணம் செய்யக்கூடிய நாடுகளின் எண்ணிக்கையும் வருமாறு:

1. சிங்கப்பூர், ஜப்பான் (192) 2. ஜேர்மனி, தென் கொரியா (190) 3. பின்லாந்து, இத்தாலி, லக்சம்பெர்க், ஸ்பெய்ன் (189) 4. ஆஸ்திரியா, டென்மார்க், பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிடன் (188) 5. அயர்லாந்து, போர்த்துக்கல் (187) 6. பெல்ஜியம், நியூசிலாந்து, நோர்வே, சுவிட்சர் லாந்து, பிரிட்டன், அமெரிக்கா (186) 7. அவுஸ்தி ரேலியா, கனடா, செக் குடியரசு, கிரீஸ், மால்டா (185) 8. போலந்து, ஹங்கேரி (183) 9. லித்து வேனியா, ஸ்லோவாக்கியா (182) 10. எஸ்டோ னியா, லாட்வியா, ஸ்லோவேனியா (181). (அ)

# இலங்கை இளைஞனை காதலித்த முஸ்லிம் யுவதியை ஆணவக்கொலை செய்வதற்கு முயன்றனர் பெற்றோர்

## அவுஸ்திரேலியாவில் அதிர வைக்கும் சம்பவம்

*அடிலெய்ட், ஜன. 14*

அவுஸ்திரேலியாவில் இலங்கை இளைஞனை காதலித்த பாகிஸ்தான் பின்னணியுடைய யுவதியை ஆணவக் கொலை செய்ய முயற்சித்த, குடும்பத்தி னர் பற்றிய மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதிக்கப்பட்ட யுவதியின் குடும்பத் தைச் சேர்ந்த 5 பேர் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

21 வயதுடைய யுவதியின் வயிற்றில் பெரிய சமையலறைக் கத்தியால் பல முறை குத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அடிலெய்ட் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

கடந்த நவம்பர் 30ஆம் திகதி செப் டன் பிளாசா ஷொப்பிங் சென்டர் கார் தரிப்பிடத்தில் இந்த கொலைவெறிச் சம்பவம் நடந்தது. கத்திக்குத்து தாக்குத லால் சிறுநீரகம் துளையிடப்பட்டு, கல் லீரல் சிதைந்ததுடன், குறிப்பிடத்தக்க உள் இரத்தப்போக்கால் யுவதி பாதிக்கப் பட் டார். அவர் தற்போது பாதுகாப்பு இல்ல மொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

தெற்கு அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட், பிளேர் அத்தோல் பிர தேசத்தில் வசித்துவந்த - பாகிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்ட 21 வயது முஸ் லிம் யுவதி ஒருவர், இலங்கையை பூர்வீக மாகக்கொண்ட கிறிஸ்தவ இளைஞரைக் காதலித்தார். இருவரும் ஒன்றாகக் கல்வி கற்ற பல்கலைக்கழகத்தில் இந்தக் காதல் ஏற்பட்டது.

எனினும், யுவதி 17 வயதில் வடக்கு பாகிஸ்தானில் உள்ள தனது மச்சானுடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தார்.

இலங்கை இளைஞனுடனான காதலை, யுவதியின் குடும்பத்தினர் கடுமையாக எதிர்த்துள்ளார்கள். இதனை யடுத்து, குறிப்பிட்ட யுவதி வீட்டை விட்டு வெளியேறி தனது காதலனுடன் வசிப்பதற்காகச் சென்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி, குறிப்பிட்ட யுவதி பொது வான இடமொன்றில் தனது தாயாரை சந்திக்கச் சென்றுள்ளார். அடிலெய்ட் செப்டன் பிளாசா ஷொப்பிங் சென்ரர் கார் தரிப்பிடப் பகுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெறுவதற்கு ஏற் பாடானது.

காலை 7.45 மணியளவில் யுவதியின் காதலர், செப்டன் பிளாசா ஷொப்பிங் சென்டர் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் தனது காதலியை இறக்கிவிட்டுச் சென்றுள்ளார்.

குறிப்பிட்ட யுவதி தனது தாயாருட னும் சகோதரியுடனும் பேசிக்கொண்டிருந்த போது, தங்களை விட்டுப் போகவேண்டாம் என்று அவரது சகோதரி, கைகள் இரண்டையும் இறுக்கிப் பிடித்துள்ளார்.

அதுவரைக்கும் அங்கு பதுங்கியிருந்த, யுவதியின் தந்தை, சகோதரன், மச்சான் ஆகியோர் திடீரென்று அங்கு வந்து, யுவதியை இழுத் துத் தமது சிவப்பு ஹோல்டன் குரூஸ் காரில் ஏற்றுவதற்கு முயற்சித்தார்கள். யுவதி அதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோது, யுவதி யின் வயிற்றில் பெரிய சமையல் கத்தி யால் சரமாரியாகக் குத்தி, காருக்குள் தள்ளி, தங்களது வீட்டுக்குக் கொண்டுபோனார்கள்.

"எந்த நேரத்திலும் அவர்களில் யாரும் அம்புலன்ஸை அழைக்கவில்லை," என்று சட்டத்தரணி நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

"அதிர்ஷ்டவசமாக, அவளுடைய காதலனுக்கு ஒரு நண்பன் தகவல் வழங்கி னார். காதலன் பொலிஸாரை அழைத் தார். சம்பவ இடத்துக்கு சென்ற பொலி ஸார், அந்த வீட்டு முகவரிக்கு அம்பு லன்ஸை அழைத்தனர்." என்றும் குறிப்பிட்டார்.



இந்தச் சம்பவத்தில், குறிப்பிட்ட யுவதியின் தந்தை, தாய், சகோதரி, சகோதரன், மச்சான் ஆகிய ஐவர் மீதும் கொலைமுயற்சி வழக்குப் பதிவு செய்யப் பட்டு வழக்கு விசாரணை நடைபெற்றது.

இந்த சம்பவம் நடப்பதற்கு நாட்க ளின் முன்னர், யுவதியின் சகோதரர்கள் இருவர், காதலனின் வீட்டுக்குள் அத்து மீறி நுழைந்துள்ளனர்.

அத்துடன், யுவதி அதிதீவிர சிகிச் சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற சமயத் தில், யுவதியின் வங்கிக்கணக்கிலி ருந்த பணம் எடுக்கப்பட்டு விட்டது.

சந்தேகநபர்கள் ஐந்து பேரின் மனு கோரிக்கையை தலைமை மாஜிஸ்திரேட் மேரி லூயிஸ் ஹிரிபால் நிராகரித்து, பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண்ணின் பாதுகாப்பு மிக முக்கிய மானது என்று கூறினார்.

குடும்பத்தின் ஐந்து உறுப்பினர்கள் மீதான விசாரணையும் மீண்டும் மார்ச் மாதம் இடம்பெறும். (அ)



## ஒய்வு அறிவிப்பை மீள பெற்றார் பானுக!

கொழும்பு, ஜன. 14

இலங்கை கிரிக்கெட் வீரரர் பானுக ராஜபக்ஷ தனது ஒய்வு கடிதத்தை மீளப்பெறுவதாக இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளார். இதனை, இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் செயலாளர் மொஹான் டி சில்வா உறுதிப்படுத்தியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் முடிவை பானுக ராஜபக்ஷ ஜனவரி 3 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திற்கு அனுப்பிய கடிதத்தில் குறிப் பிட்டிருந்தார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, லசித் மலிங்க உட்பட பல முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் அவரது ரசிகர்கள் பலர் ஓய்வு குறித்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கூறியிருந்தனர்.

இந் நிலையில் இலங்கை கிரிக்கெட் வீரர் பானுக ராஜபக்ஷ விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஒய்வு முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு பானுக ராஜபக்ஷவிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தார். இந் நிலையிலேயே பானுக ராஜபக்ஷ ஒய்வு குறித்த முடிவை மீளப் பெற்றுள்ளதாக தெரியவருகிறது. (ஐ)



## சிட்னி சர்வதேச ரென்னிஸ்; அரையிறுதியில் படோசா!

சிட்னி, ஜன. 14

ஸ்பெயின் நாட்டின் ரென்னிஸ் வீராங்கனையான படோசா சிட்னி சர்வதேச ரென்னிஸ் போட்டியின் அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதேசமயம், மற்றோர் ஸ்பெயின் வீராங்கனையான முருகுஷா காலிறுதியில் தோல்வியடைந்தார்.

சிட்னி சர்வதேச ரென்னிஸ் போட்டி அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. இதில் நேற்று நடந்த காலிறுதிப் போட்டியில் ஸ்பெயினின் பவுலா படோசாவும், சுவிற்சர்லாந்தின் பென்கிக் ஆகியோர் மோதினர்.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் முதல் செற்றை 7 -6 (8-6) என்ற செற் கணக்கில் படோசா வெற்றி பெற்றார். இரண்டாவது செற்றில் 3 - 6 என்ற கணக்கில் பென்கிக் வென்றார்.

இதனால், மூன்றாவது சுற்று வெற்றி - தோல்வியை தீர்மானிப்பதாக மாறியது. இந்த செற்றை 6 - 3 என்ற கணக்கில் படோசா வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

இதேவேளை, மற்றொரு காலிறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனையான முருகுஷா 4-6, 4-6 என்ற செற் கணக்கில் கசற்கினாவிடம் தோல்வியடைந்தார். (ஐ)

# தென்னாபிரிக்காவை சுருட்டியது இந்தியா!

கேப்டவுன், ஜன. 14

பும்ராவின் அசத்தல் பந்துவீச்சால் தென்னாபிரிக்கா அணியை 210 ஓட்டங்களுக்கு சுருட்டியது இந்திய அணி.




தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்ற நிலையில், மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி தற்போது நடக்கிறது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 233 ஓட்டங்களுக்கு அந்த அணி சகல விக்கெட்களையும் எடுத்த நிலையில், பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்கா. முதல் நாள் ஆட்டம் முடிவில் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்திருந்தது.

இரண்டாம் நாளில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பமே தடுமாற்றமாக இருந்தது. அய்டன் மார்க்ரம் 8 ஓட்டங்களுடன் இரண்டாவது விக்கெட்டாக வீழ்ந்தார். அடுத்துவந்த கேஷவ் மஹராஜ் நிதானம் காட்ட, கீகன் பீற்றர்சனும் பொறுமையாக ஆடினார்.

எனினும், இந்த இணையும் நீண்டநேரம் நீடிக்கவில்லை. கேஷவ் 25 ஓட்டங்களுடன் யாதவின் பந்தில் ‘போல்ட்’ ஆக, அடுத்து வந்த வான் டெர் டுசென் 21 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன் பின் வந்த பவுமா 28 ஓட்டங்களே தாக்குப்பிடித்தார்.

பின்னர் வந்த வீரர்களும் சொதப்பவே கீகன் பீற்றர்சன் 8ஆவது விக்கெட்டாக 72 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். இவர் பெற்ற ஓட்டங்களே அந்த அணி சார்பில் வீரர் ஒருவர் பெற்ற அதிக ஓட்டமாக அமைந்தது.

இறுதியில், 76.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது தென்னாபிரிக்கா.

இந்தியாவின் பந்துவீச்சில் பும்ரா 5 விக்கெட்களையும், உமேஷ் யாதவ், முஹமட் ஷமி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி இரண்டாம் நாள் முடிவில் 57 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து தடுமாறியது. புஜாரா 9, விராட் கோலி 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)

## பிடியெடுப்பில் விராட் கோலி சதம்!

கேப்டவுன், ஜன. 14

இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் விராட் கோலி டெஸ்ட் போட்டியில் பிடியெடுப்பு மூலமான ஆட்டமிழப்பில் 100 என்ற மைல்கல்லை தொட்டார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக கேப்டவுனில் நடக்கும் மூன்றாவது போட்டியிலேயே அவர் இந்த சாதனையை எட்டினார்.

நேற்று முன்தினம் தென்னாபிரிக்க வீரர் பவுமா அடித்த பந்தை பிடியெடுத்ததன் மூலமே தனது 100ஆவது பிடியெடுப்பை செய்தார்.

விராட் கோலி 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இந்த சாதனையைப் படைத்துள்ளார். டெஸ்ட் அரங்கில் 100 பிடியெடுப்புகளை செய்த ஆறாவது இந்திய வீரர் இவராவார். (ஐ)






## இளையோர் உலகக்கிண்ணம் மே.இ.தீவுகளில் இன்று ஆரம்பம்!

ஜமைக்கா, ஜன. 14

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இன்று மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகின்றது.

இளையோருக்கான இந்த உலகக் கிண்ணப் போட்டி கடந்த 1988ஆம் ஆண்டு அறிமுகமானது. இதுவரை 13 உலகக் கிண்ணத் தொடர்கள் நடைபெற்றன. இவற்றில், இந்தியா 4 முறையும், அவுஸ்திரேலியா 3 முறையும், பாகிஸ்தான் 2 தடவையும், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் ஆகிய அணிகள் தலா ஒரு முறையும் பட்டத்தை வென்றுள்ளன.

இந்த நிலையில் இன்று ஆரம்பமாகும் தொடரில், 16 நாடுகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம் பெற்றுள்ளன.

இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா, ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளுடன் ‘டி’ பிரிவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வென்மேரி அறக்கட்டளை அங்குரார்ப்பண நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜன. 14

வென்மேரி அறக்கட்டளை நிலையம் யாழ்ப்பாணம் 27/3, பிரப்பங்குளம் வீதியில் மூத்த பத்திரிகையாளர் ச. ரதேயனால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அறக்கட்டளையின் அங்குரார்ப்பண நிகழ்வு நாச்சிமார் கோயிலடியிலுள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறை தலைவரும் பேராசிரியருமான எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருத்துவர் சி. யமுனானந்தா, கல்விமான்கள், இலக்கியவாதிகள், மதகுருமார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வென்மேரி அறக்கட்டளை ஊடாக ஆண்டு தோறும் பல துறைகளில் பாண்டித்துவம் பெற்றவர்களை தெரிவு செய்து விருது வழங்கப்படவுள்ளது. மறைந்த எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளின் பெயர்களில் இந்த விருதுகள் மற்றும் பொருளாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கனடாவில் வசிக்கும் உறவுகளால் இந்த அறக்கட்டளை இயக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மரண அறிவித்தல்

மலர்வு 31 - 10 - 1932



உதிர்வு 12 - 01 - 2022

## துரையப்பா நவரட்ணம்

யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெமட்டகொடையை வசிப்பிடமாகவும், கனடா Scarborough வை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா நவரட்ணம் அவர்கள் 12.01.2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார்,காலஞ்சென்ற துரையப்பா - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சுப்பையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், ராஜ்குமார்,செல்வகுமாரி, சாந்தகுமாரி, நளினகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், Princy, கீர்த்தி, Kilbert ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகபூசணி, கனகாம்பிகை(பேபி), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகபூசணி கனகசபாபதி, கனகசபாபதி, வாமதேவன் பார்வதி, கருணைக்கடாச்சி சிதம்பரநாதன் மற்றும் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனரும், Stephen, Shaun, Adrian, அருணன்,அனுஷ்கா,பிரகலாதன், அஸ்வின், சரண்யா, அபிலாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :

**செல்வி (மகள்) - 00447825031116**
**நளினி (மகள்) - 00447949193977**
**பாஸ்கர் (மருமகன்) - 001416569309**

# தொற்றுக்கு பின் மக்களிடையே மனச்சோர்வு, பதற்றம் அதிகரிப்பு



கொழும்பு, ஜன.14

**கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலையடுத்து, மனச்சோர்வு மற்றும் பதற்றத்தால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தேசிய மனநல சுகாதார நிறுவனத்தின் விசேட மனநல மருத்துவ நிபுணர் சஜீவன அமரசிங்க தெரிவித்தார்.**

மனச்சோர்வு அதிகரிப்பதை பெரும்பாலான மக்கள் அறிந்து கொள்வதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டு தேசிய மனநல சுகாதார நிறுவனத்தின் மனநல உதவி சேவைகள் அவசர அழைப்பு பிரிவுக்கு 26 ஆயிரத்து 889 அழைப்புகள் கிடைத்தன.

2020ஆம் ஆண்டில் இந்தப் பிரிவுக்கு 28,508 அழைப்புகள் வந்தன. தினசரி வாழ்க்கை முறை மாற்றத்தால் மனச்சோர்வுகளால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

இந்த மனச்சோர்வு மற்றும் மனநல பாதிப்புகளுக்கு வீட்டு வன்முறையே பிரதான காரணியாக அமைந்துள்ளது. இது தற்கொலைக்கு தூண்டும் விடயமாகும். முழு முடக்கம் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட காலத்தில், மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிய நிலையில், குடும்பங்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் அமைதியற்ற சூழலுக்கு வழிவகுத்தன.

வேலை இழப்புகள், தொழில் முறிவுகள், வீட்டில் அதிக வேலைப்பளு, மனக்கசப்பு மேலும் தடையற்ற இணைய அணுகல் ஆகியவை இந்த மன அழுத்தத்துக்கு முக்கிய காரணிகளாகும். மனநல உதவி சேவையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு வந்த சில அழைப்புகளில், குழந்தைகளும் கைபேசிக்கு அடிமையாகி இருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

விளையாட்டு நடவடிக்கைகள் இன்றி வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்க நேரிட்டதால் சிறுவர்களும் மனச்சோர்வு, பதற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (கே)

## விடேச அதிரடிப்படையின் சுற்றிவளைப்பில் பலர் கைது

கொழும்பு, ஜன.14

நாடளாவிய ரீதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று, பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மதுபான உற்பத்தி தொடர்பான சுற்றிவளைப்புகளில், ஐவர் கைதாகினர். அத்துடன், 102 லீற்றர் சட்டவிரோத மதுபானம், 150 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டன.

கம்பஹா - மினுவாங்கொடை பொலிஸ் பிரிவில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 10 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காலி துறைமுக பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், தீர்வை வரியின்றி இந்த நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 13 ஆயிரத்து 300 புகைத்தல் பொருட்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இரத்தினபுரி, உடவளவையில் ஒரு தொகை மரக்குற்றிகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டனர். (கே)

## மனிதநேயம் மற்றும் சமூக சேவைகளுக்காக கலாநிதி பட்டம்



தொழிலதிபர் ஈ. எஸ். பி. நாகரத்தினத்துக்கு Global Peace பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கியது. அவருக்கான பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் வழங்கிக் கௌரவித்தார்.

# ஐ.தே.கவின் புதுமுகங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு

கொழும்பு, ஜன.14

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து எதிர்கால அரசியலில் ஈடுபடவுள்ள புதுமுகங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு, எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன என்று கட்சியின் தலைமையகம் அறிவித்துள்ளது.

கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக, சுகாதார விதிமுறைகளுக்கு அமைய இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தவிசாளர் வஜிர அபேவர்த்தன, உப தலைவர் அகில விராஜ் காரியவசம் ஆகியோரின் பங்களிப்புடன் ஐ.தே.கவுக்கான எதிர்கால உறுப்பினர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கை கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே முதற்கட்ட அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் பின்னர் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கட்டம்கட்டமாக புதிய முகங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு முன்னெடுக்கப்படும் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (கே)

## தமிழர்கள்...

752 பக்கங்கள் கொண்ட 2022ஆம் ஆண்டுக்கான 32ஆவது பதிப்பு அறிக்கை, 100 நாடுகளில் மனித உரிமைகள் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வதாக உள்ளதுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் அரசாங்கம் சர்வதேசத்திற்கு வாக்குறுதியளித்த சட்ட சீர்திருத்தங்களை நிறைவேற்றவும் தவறிவிட்டது. போர் குற்றங்கள் மற்றும் பாரதூரமான உரிமைகள் மீறல்களுக்கான பொறுப்புக்கூறலையும் அது தடுத்துவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி கூறுகையில்,

“கடந்த காலஉரிமைகள் மேம்பாடுகளை மாற்றியமைக்கவும் கடுமையான துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்களை பாதுகாக்கவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ உறுதியாக இருக்கிறார் என்று தெரிகிறது. சர்வதேச விமர்சனங்களை குறைக்க, சீர்திருத்தங்கள் மற்றும் நீதியை உறுதியளிக்கும் அதேவேளையிலேயே சிறுபான்மை சமூகங்களை ஒடுக்குவதையும் அவரின் நிர்வாகம் முடுக்கிவிட்டுள்ளது.

ராஜபக்‌ஷ அரசாங்கம் தனது சொந்த சீர்திருத்த உறுதிமொழிகளை புறக்கணித்து தமிழர்கள், முஸ்லிம்களை குறிவைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது.

பயங்கரவாத தடைச் சட்டம் நாட்டின் நீண்டகால துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மற்றும் மத சுதந்திரம் மற்றும் சிறுபான்மையினரின் நில உரிமைகளை அச்சுறுத் தும் கொள்கைகளை அரசாங்கம் பயன் படுத்துகின்றது.

மார்ச் 2021இல் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை, எதிர்கால வழக்குகளில் பயன்படுத்துவதற்காக இலங்கையில் இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரித்து தயாரிப்பதற்கு ஐ. நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை கட்டாயப்படுத்தியது. ஆனால், இலங்கை பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டால், முந்தைய நிர்வாகத்தின் கீழ் தொடங்கப்பட்ட மனித உரிமைகள் விசாரணை கைவிடப்படும்.

தவிர, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் சுயாதீன அமைப்புகளுக்கு மோசமான உரிமை மீறல் - பதிவுகளை கொண்டவர்களை ராஜபக்‌ஷ அரசாங்கம் நியமித்தது. இது அவர்கள் மீதான நம்பகத்தன்மையையும் சுதந்திரத்தையும் குறைமதிப்புக்கு உட்படுத்தியுள்ளது. 2021ஆம் ஆண்டு முழுவதும், இலங்கை படையினர் மனித உரிமைகள் பாதுகாவலர்கள், செய்தியாளர்கள், சட்டத் தரணிகள், மற்றும் கடந்த காலங்களில் துஷ்பிரயோகங்களில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை துன்புறுத்தி - அச்சுறுத்தி அமைதியான போராட்டங்களை நசுக்கின. பயங்கரவாத புலனாய்வு பிரிவு பயங்கரவாதத்துக்கான நிதியுத வியை எதிர்த்துப் போரிடுதலின் பெயரால் அவர்களின் நிதி ஆதாரங்களில் தலையிட்டது.

கோவிட் - 19 கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்திகிறோம் என்ற பெயரால் குறைந்தது மூன்று பேரை பொலிஸ் துறை கொன்றது -என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## கைதிகளின்...

படையில் ஜனாதிபதி விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த விடுத லைப் பொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கைதிகளாக இருந்து விடுதலை பெற்ற குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் பொங்கல் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள் சிலரும், யாழ்ப்பாணத்தை சேர்ந்த அரசியல் கைதிகள் மற்றும் அவர்களது உறவினர்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், சிவகுரு ஆதீன குரு முதல்வர் வேலன் சுவாமிகள், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## மீசாலையில்...

இதனால், தாம் பெரும் அச்சத்துக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாகியுள்ளனர் என்று தென்மராட்சி பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, யாழ். மாநகர சபை எல்லைக்குள் ஸ்மார்ட் லாம்போல் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இதற்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியதைத் தொடர்ந்து தொடர்பு சாதனங்கள் பொருத்தப்படவில்லை.

இந்த நிலையிலேயே, சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட மீசாலை மற்றும் கிராம்புவில் கிராமப் பகுதிகளில் ஸ்மார்ட் லாம்போல் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு, தொலைத்தொடர்பு உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த விடயம் அந்தப் பகுதிகளின் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில், சாவகச்சேரி நகர சபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனிடம் செய்தியாளர்கள் தொடர்புகொண்டு கேட்டபோது, “குறித்த கோபுரங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன என்று பொதுமக்கள் நகரசபைக்கு முன்வைத்த முறைப்பாட்டை அடுத்து எமது அதிகாரிகள் சென்று நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு கடந்த 10 நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்கியிருந்தனர். இந்நிலையில், அந்தக் கோபுரங்கள் நகரசபையின் எந்த அனுமதியும் பெறாமல் நிர்மாணிக்கப்பட்டு, சட்டவிரோதமாக தொலைத்தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்”, என்றார்.

வடக்கில் குறித்த தனியார் தொலைதொடர்பு நிறுவனம் ஸ்மார்ட் லாம்போல் என்ற பெயரில் தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைக்க முற்பட்டிருந்தபோது குறித்த தொலைத்தொடர்பு கோபுரங்களால் சிறுவர் முதல் கர்ப்பவதி பெண்கள் வரை பலருக்கும் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படும் என்று மக்களிடையே அச்சம் நிலவி வருகின்றது.

இதேவேளை, கோவில் காணி மற்றும் சனசமூக நிலையத்துக்கு சொந்தமான காணிகளிலேயே குறித்த கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு தொலைத்தொடர்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## மீண்டும் கொரோனா...

பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த இரு வாரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை, சற்று அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக மீண்டும் கொரொனா அலை ஏற்படக்கூடும் என்ற ஐயம் நிலவுகிறது.

நாட்டின் பல பகுதிகளில் ஒமைக்ரோன் திரிபுடனான கொரொனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒமைக்ரோன் திரிபானது மிக இலகுவாக பரவக்கூடியது. அறிகுறிகள் குறைந்துள்ளபோதிலும், பெரும்பாலானோருக்கு அந்த திரிபு தொற்றக்கூடும்-என்றார். (அ)

# நகை கொள்ளை; ஆறு பேர் கைது

மட்டக்களப்பு, ஜன. 14

மட்டக்களப்பு, வெல் லாவெளி பிரதேசத்தில் பொலிஸ் சி.ஐ.டி என கூறி வீடு ஒன்றில் நுழைந்த கொள்ளையர்கள் ஆண் ஒருவரை கட்டிவைத்து விட்டு அவரின் மனைவி யின் காதில் இருந்த தோடு மற்றும் தங்க சங்கிலி உட்பட இரண்டரை பவுண் தங்கநகைகளை கொள் ளையடித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் 6 பேரை நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பி.எஸ்.பி பண் டார தெரிவித்தார்.

கடந்த 5ஆம் திகதி வெல்லாவெளி பிரதேசத்தில் சி.ஐ.டி என தெரிவித்து கொள்ளையர்கள் பெண் ஒருவரின் காதில் இருந்த தோடு மற்றும் தங்கச் சங்கிலி உட்பட இரண்டரை பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றனர். இதில் சந்தேகத்தில் இருவரை கைது செய்து விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

ஒட்டமாவடி, கிரான் பிரதேச செயலக பிரிவிலுள்ள வட்டவான் மற்றும் வெல்லாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 4 பேரை கைது செய்தனர் அவர்களிடமிருந்து கார் ஒன்று மற்றும் கொள்ளையடிக்க பயன்படுத்திய கோடரி, கத்தி , 3 கையடக்க தொலைபேசிகள் என்பவற்றை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கொரோனாவால்...

வயதுக்கு மேற்பட்டோராவர்.

இந்த நிலையில் நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15ஆயிரத்து 185 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## நயினாதீவு...

சிறப்புமிக்க தலத்தை மையமாகக் கொண்டு நடத்துவதற்கு தீர்மானித்து நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு அரச வெசாக் விழாவை வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு ரஜ மஹா விகாரையில் நடத்துவதற்கு நாம் தீர்மானித்திருந்தோம். ஆனால், கோவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதார பிரிவின் ஆலோசனைக்கேற்ப பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பை கருத்திற்கு கொண்டு அரச வெசாக் விழாவை நடத்த முடியாது போனது.

இம்முறை அரச வெசாக் விழாவிற்கு முன்னதாக நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரத்தை வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை காலம் தாமதிக்காது முன்னெடுக்குமாறு பிரதமர் அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் குறிப்பிட்டார்.

கூரகல வரலாற்று சிறப்புமிக்க தலத்தை மையமாகக் கொண்டு நடைபெறும் அரச வெசாக் விழாவுடன், கூரகல வரலாற்று சிறப்புமிக்க தலத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்துமாறு பிரதமர் தெரிவித்தார்.

அரச வெசாக் விழாவை முன்னிட்டு வெசாக் பக்தி பாடல் நிகழ்வு, தன்சல், வெசாக் அலங்காரகூடு போட்டி, சூழல் பாதுகாப்பு நிகழ்வுகள், விசேட சமய நிகழ்வுகள், கலாசார நிகழ்வுகளை நடத்துவது மற்றும் விகாரை, அறநெறி பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களை மேம்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இம்முறை அரச வெசாக் விழாவை முன்னிட்டு கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் வெசாக் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது குறித்தும் கவனம் செலுத்துமாறும் பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

கூரகல புண்ணிய தலம் அமைந்துள்ள பலங்கொட மற்றும் கல்தொட பிரதேசங்களை அண்மித்த பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்திய பிரதமர், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இம்முறை வெசாக் விழாவை சுகாதார துறையினரின் ஆலோசனைக்கேற்ப நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மேற்கொள்வோம். சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டம் என்பது விசேடமாக மரக்கன்றுகளை பகிர்ந்தளிப்பது மாத்திரமல்ல. அந்த மரக்கன்றுகள் முறையாக பாதுகாக்கப்படுகின்றனவா என்பது குறித்தும் ஆராயுமாறும் பிரதமர் குறிப்பிட்டார்.

## ஆவா குழு...

இணுவிலை சேர்ந்த வினோதன் என்பவரும், மற்றொருவரும் இவ்வாறு நேற்று சட்டத்தரணி ஊடாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

சில மாதங்களின் முன்னர் மருதனார்மட சந்தியில் பழக்கடை நடத்தும் ஒருவர் வெட்டப்பட்டிருந்தார். சரணடைந்தவர்களுடன் மது அருந்தியபோது ஏற்பட்ட தர்க்கமே வாள்வெட்டில் முடியக் காரணம் என்று கூறப்பட்டது.

இந்த வழக்கு, மற்றும் வேறு சில வழக்குகளில் தற்போது சரணடைந்தவர்கள் தேடப்பட்ட நிலையிலேயே இருவரும் சட்டத்தரணிகள் ஊடாக சரணடைந்தனர். (ஐ)

## மாதகல் மீனவர்...

னெடுக்கப்பட்டது.

மாதகல் கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி இரவு கடற்தொழிலுக்கு சென்ற மீனவரின் படகு விபத்துக்கு உள்ளான நிலையில் சக மீனவர்களால் சடலமாக மீட்கப்பட்டார். இதில், மாதகல் குசுமன் துறையைச் சேர்ந்த 31 வயதுடைய சேர்ந்த திலீபன் என அழைக்கப்படும் எட்வர்ட் மரியசீலன் என்ற மீனவர் உயிரிழந்தார்.

கடற்படை படகு மோதியதாலே ஏற்பட்டது என உள்ளூர் மீனவர்கள் குற்றம் சாட்டிய நிலையில், கடற்படையினர் தமது படகு மோதவில்லை என மறுத்தனர். அத்துடன், இந்திய ட்ரோலர் படகு மோதி இருக்கலாம் எனத் தெரிவித்து இருந்தனர்.

இந்திய ட்ரோலர் படகுகள் கரையை அண்மித்து வர முடியாது எனவும், படகு விபத்து ஏற்பட்ட பகுதிக்கு ட்ரோலர் படகுகள் வருவதற்கான சாத்தியமே இல்லை என உள்ளூர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே மீனவரின் உயிர் இழப்புக்கு நீதி கோரி ஊரவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகளும் நேற்றே இடம்பெற்றிருந்தன. (ஐ)

## புகையிரத நிலைய...

முனைந்த பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

ரயில் பயண கால அட்டவணையை நடைமுறைப்படுத்தாமை, புகையிரதத் திணைக்கள ஊழியர்களை முறையாக நிர்வாகம் செய்ய தவறியமை உள்ளிட்ட சில விடயங்களை முன்வைத்து இந்த வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெற்றது.

எனினும், 280ரயில் சேவைகளில் குறுகிய தூரங்களுக்கான 80 சேவைகள் மட்டும் நடத்தப்பட்டன. புகையிரத சேவையினரின் திடீர் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தால் அசௌகரியங்களை எதிர்கொண்ட பொதுமக்கள் சிலர் ரயில்கள்மீது கல்வீச்சு தாக்குதலையும் நடத்தியுள்ளனர்.

கொழும்பு - மட்டக்களப்பு நோக்கி சென்ற ரயில் கெக்கிராவை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அதன் யன்னல் கண்ணாடிகள் அடித்து டைக்கப்பட்டன.

இதேவேளை, வடக்கு மாகாணத்துக்கான புகையிரத சேவைகள் இன்று வழமைக்கு திரும்பும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 - 11 - 1965



மறைவு
07 - 12 - 2021

### சுந்தரலிங்கம் சுகிந்தன்
### (ரமேஸ்)

யாழ். சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சுகிந்தன் அவர்கள் 07-12-2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவனையா சுந்தரம், காலஞ்சென்ற கார்த்திகேசு இராசம்மா தம்பதியரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரவேலு - இராயேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், உமாதேவி(இலங்கை) அவர்களின் பாசமிகு கணவரும்,சுஜிதரன் (லண்டன்), ரம்மியா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சுரேஸ்(ஜேர்மனி), சுமி (சுவிஸ்), சுயா(லண்டன்), சர்மிலா(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,புஸ்பா(ஜேர்மனி), பிரபாகரன் (சுவிஸ்), புஸ்பநாதன்(லண்டன்), றோய்(லண்டன்), ரதி(லண்டன்), தயாபரன்(ஜேர்மனி), வவா(பிரான்ஸ்), மனோ(சுவிஸ்), சிறி(பிரான்ஸ்), ராசன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தவராஜா(லண்டன்), ஆனந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும், கலா (ஜேர்மனி), சுதா(சுவிஸ்), யணனி(சுவிஸ்), ரஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், சாருஜன் அவர்களின் பாசமிகு சித்தப்பாவும், பிரியந்தா, துவாரகா, பிரியந்தன், அஞ்சளா, ஸ்ரேயா, கரிகாலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தேவ் அவர்களின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

*கிரியை :*
Sunday, 16 Jan 2022 1:00 PM - 3:00 PM
Barnet Multi Cultural Community Centre Ltd Hendon Sports Centre (Youth & Community Centre), Algernon Rd, London NW4 3TA, United Kingdom

*தகனம் :*
Sunday, 16 Jan 2022 4:00 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**புவனேஸ்வரி(பூ) - தாய்**
Mobile : +447723312792
**சுஜி - மகன்**
Mobile : +447445478264

தகவல்:
**குடும்பத்தினர்**

# எமது கட்சிக்கு முன்னுரிமை; பங்காளிகள் ஏற்கிறார்கள்!

## விக்னேஸ்வரன் எம். பி. சொல்கிறார்



யாழ்ப்பாணம், ஜன. 14

**எமது பங்காளிக் கட்சிகளை நாங்கள் பாராட்ட வேண்டும். எமது கட்சிக்கு முன்னுரிமை அளிப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதனால் அவர்களுடன் இணைந்து செயல்படுவது இலகுவாக உள்ளது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

தமிழ் மக்கள் கூட்டணியின் செயல்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் பதிவின் பின்னர் நேற்று முதலாவது செயல்குழு கூட்டம் நடைபெற்றது. மக்கள் பொருளாதார ரீதியாகப் பலம் இழந்து காணப்படுகின்றார்கள். இந்த நிலையில் நாங்கள் எந்த அளவுக்கு கட்சி என்ற ரீதியில் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாக பேசியுள்ளோம். அந்த வகையில் வீட்டுத் தோட்டம் காளான் வளர்ப்பு பற்றி ஆராய்ந்தோம்.

எங்களால் முடிந்த புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து மக்களுக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய முடியும் என்று பேசியுள்ளோம்.

தவழ்ந்துவிட்டு தற்பொழுது எழுந்து நிற்கும் கட்சியாக நாங்கள் இருக்கின்றோம். அடிமட்டத்தில் மக்களின் ஆதரவை நாங்கள் உறுதி செய்ய வேண்டும். அடிமட்டத்தில் மக்களிடம் வேலை செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதேவேளை தலைவர்கள் மூத்தவர்களின் அனுபவங்களும் அறிவும் அரசியல் ஞானமும் இளைஞர்களின் வீரியமும் சேர்ந்து எமது கட்சியைக் கொண்டு நடத்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இதுவரை காலமும் நாங்கள் கூட்டணி என்ற வகையிலே ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயல்பட்டோம். என்னுடைய கருத்து என்னவென்றால் ஒவ்வொரு பங்காளிக் கட்சியும் தம்மை பலப்படுத்த வேண்டும். பின்னர் தேர்தல் காலத்தில் எல்லோரும் சேர்ந்து பொதுச் சின்னத்தில் முன்னிறுத்தி முகம் கொடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## வாள்களுடன் இருவர் கைது!

கிளிநொச்சி, ஜன. 14

வாள்களுடன் கிளிநொச்சியில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி - மாயவனூர் பகுதியிலேயே இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சிறப்பு அதிரடிபடையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரு வாள்களும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## யாழ்ப்பாணம் இலங்கையின் நகரமே வேறு நாட்டின் தெற்கில் உள்ளது அல்ல!

### இப்படி விளக்குகிறார் சீன தூதர்

கொழும்பு, ஜன. 14

யாழ்ப்பாணத்துக்கான பயணத்தின் பின்னணியில் மறைவான நிகழ்ச்சி நிரல் கள் எதுவும் இல்லை. அது இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள நகரமே அன்றி, வேறு எந்த நாட்டினதும் தெற்கில் அமைந்துள்ள நகரம் அல்ல என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சென் ஹொங் தெரிவித்துள்ளார்.


கொழும்பில் பத்திரிகையாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் இலங்கைக்கான சீனாவின் தூதுவர் என்ற முறையில் நாட்டின் பல் வேறு பகுதிகளுக்கு செல்வது எனது கடமை. இருப்பினும் கொரோனா தொற்று நோய் காரணமாக என்னால், பல பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் போனது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு செல்வது என்பது பல காலத்திற்கு முன்னர் திட்டமிடப்பட்ட நடவடிக்கை என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## வடக்கு, கிழக்கிலிருந்து தேசிய வீரர்களை உருவாக்க வேண்டும்!

### அரச ஆதரவு எம்.பிக்களே அழுத்தம் கொடுங்கள் என்கிறார் சாணக்கியன்



மட்டக்களப்பு, ஜன. 14

“ஜனாதிபதி கனவுடன் உள்ள நாமல் ராஜபக்ஷவின் விளையாட்டுத் துறை தொடர்பான வாக்கெடுப்பின்போது வட, கிழக்கிலிருந்து தேசிய அணிக்கு வீரர்களை அனுப்பக்கூடிய கழகம் ஒன்றை உருவாக்குமாறு அரசாங்க ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தங்களை வழங்க வேண்டும்”, என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

தேசிய கபடி போட்டியில் சாதனை படைத்த மட்டக்களப்பு மாவட்ட அணி வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு இராச மாணிக்கம் மக்கள் அமைப்பின் ஏற் பாட்டில் நேற்று மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய கபடி சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய கபடிப் போட்டியில் மட்டக்களப்பு ஆண்கள் அணி இரண்டாம் இடத்தையும் பெண்கள் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன. இதற்கான கௌரவிப்பு நிகழ்வே நேற்று இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : மங்கல இசை
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.00 மணி : கடவுள் இல்லம்




11.00 மணி : ASK பொங்கல்
**பகல்**
12:00 மணி : பொங்கல் வாழ்த்து நேரலை
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- பொங்கல் சிறப்பு நேரலை
5.30 மணி : அதிரடி இசை - பொங்கல் சிறப்பு



6.00 மணி : தைப்பொங்கல் சிறப்பு பட்டிமன்றம்



**இரவு**
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- பொங்கல் சிறப்பு



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்